Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu
www.nimirvu.org

பார்வை – 26 பங்குனி, 2019 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00



# நீதிகேட்டு திரண்டது தமிழினம்



## சூழல் நேய அக்கறையுடன் அணிகலன்களை உருவாக்கும் யசோதா பாலச்சந்திரன்



## முள்ளிவாய்க்கால் நம் கடமை என்ன?



## அரசியல்கைதிகள் விவகாரம் மனித உரிமை சார்ந்தது மட்டுமல்ல அரசியல் சார்ந்தது

ஆராயும் அறிவே நிமிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழல் நேய அக்கறையுடன் அணிகலன்களை உருவாக்கும் யசோதா பாலச்சந்திரன்

இயற்கையான சூழலில் மரங்களால் சூழப்பட்டிருக்கிறது வீடு. முன்னுள்ள சிறிய கொட்டகையில் இருந்து தான் தன் கற்பனைத் திறனுக்கு ஏற்றவாறு அணிகலன்கள் அலங்காரப் பொருள்களை உருவாக்கி வருகிறார் இணுவிலில் வசிக்கும் யசோதா பாலச்சந்திரன். இவர் பாலச்சந்திரன் – மகேஸ்வரி தம்பதிகளின் கடைசி மகள். செய்த கைவினைப் பொருள்களில் அழகும், நேர்த்தியும் தெரிகிறது. சூழலில் கிடைக்கும் இயற்கையான பொருள்களைக் கொண்டு பல்வேறு கைவினைப் பொருள்களை யும் உருவாக்கியுள்ளார். பெரும்பாலும் தனக்குத் தெரியாத கைவினைப் பொருள்களின் வடி வமைப்புக்களை இணையத்தை பார்த்து கற்றுக் கொண்டு, பின் அவற்றைத் திறம்பட வடிவமைக் கிறார்.

Art and design பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் 2015 ஆம் ஆண்டில் முடித்துள்ளார். படிப்பை முடித்துவிட்டு அரசாங்கத்தில் அல்லது வேறு நிறுவனங்களில் மட்டும் வேலையைத் தேடிக் கொண்டிருப்பதை விடுத்து தன் சொந்தக் காலில் நிற்கும் சுயதொழில் முயற்சியை தன்னார்வத்துடன் செய்து வருகிறார். அத்துடன் 3 வருடங்களாக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் கைவினைத் தயாரிப்புத் துறையில் Visiting Instructor ஆக மாணவர்களுக்குப் கற்பித்து வருகின்றார்.

**யசோதாவுடன் பேசியதில் இருந்து,**

முதலில் குழந்தைகளுக்கு தேவையான சிறிய அணிகலன்கள், கைப்பணிப் பொருட்களை உருவாக்கினேன். பின்னர் பெண்கள் கழுத்தில் அணியும் முத்து மாலைகளில் இருந்து பல்வேறு வகையான மாலைகளையும் செய்து சமூக வலைத் தளத்தில் எனது பக்கத்தில் பதிவேற்றுவேன். அவற்றுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

பின்னர் எங்கள் சூழலில் கிடைக்கும் இயற்கையான பொருள்களைக் கொண்டும் பெண்களுக்கு தேவையான அணிகலன்களை நிறைய உருவாக்கியிருக்கிறேன். நெல் மணியில் செய்த கழுத்தணி எல்லோரிடமும் நல்ல வரவேற்பை பெற்றது. இங்கு, நான் தான் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் இப்படியான முயற்சியை செய்திருக் கிறேன் என நினைக்கிறேன். நெல்மணியில் ‘ஆரம் செட்’ ஒன்று செய்ய நான்கு நாட்கள் தேவையாக உள்ளது. இந்த தொழிலுக்கு உச்சப்பட்ச பொறுமை அவசியமாகும். ஆனால், பேப்பர்களில் செய்யும் அணிகலன்கள், அலங்காரப் பொருட்களுக்கும், இயற்கை யில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் அலங்காரப் பொருட்களுக்கும் எம் ஊர்களில் பெரிதாக சந்தைவாய்ப்பு இல்லை. ஆனால், நான் பங்கேற்கும் கண்காட்சிகளில் சிங்கள மக்கள், வெளிநாட்டவர்கள் எனப் பலரும் குறித்த பொருள்களை ஆர்வத்துடன் வாங்கி வருகின்றனர்.

பிறந்தநாள், திருமண நாள் வாழ்த்து அட்டைகளையும் தயாரித்து வருகிறேன். இம் முறை காதலர் தினத்தத்துக்கு காதலர் தின அட்டை செய்திருந்தேன். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இதையும் தவிர ஓவியங்களையும் உருவாக்கி வருகிறேன்.

பெண்களின் விருப்பங்கள், தேவைகள் மாறும் போது நாமும் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரே மாதிரி தான் செய்வேன் என சொல்லிக் கொண்டு இருக்க முடியாது. அதனால் புதிய புதிய பிந்திய வடிவங்களை கற்றுக் கொண்டு அணிகலன்களை உருவாக்கி வருகின் றேன். இவைகளுக்கு புலம்பெயர் தேசத்து தமிழ் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு இருக்கிறது. புலம்பெயர் நாடுகளுக்கும் அனுப்பி வருகிறேன்.

**“எங்கள் சூழலில் கிடைக்கும் இயற்கையான பொருள்களைக் கொண்டும் பெண்களுக்கு தேவையான அணிகலன்களை நிறைய உருவாக்கியிருக்கிறேன். நெல் மணியில் செய்த கழுத்தணி எல்லோரிடமும் நல்ல வரவேற்பை பெற்றது”**



**(நெல்லில் வடிவமைத்த ஆரம் செட்)**

வெளிநாடுகளில் இருப்பவர்கள் இங்குள்ள தமது உறவினர்களிடம் சொல்லியும் இப்படியான வடிவமைப்புக்களில் செய்து தரச் சொல்லி கேட்டு வாங்குகின்றார்கள்.

எனக்கு தெரிந்த கைவினைப் பொருள் களை செய்யும் முறையை ஆர்வமுள்ளவர் களுக்கு தொலைக்காட்சிகளிலும் நேரிலும் சொல்லிக் கொடுத்து வருகின்றேன். எதிர்காலத் தில் சொந்தமாக அணிகலன்கள், கைவினைப் பொருள்கள் காட்சியறை திறக்கும் எண்ணமும் உள்ளது. எனது வாழ்வாதாரத்தையும் முழுமை யாக இதனை நம்பிக் கொண்டு போகும் நிலைக்கு வரவேண்டும் என்பதே என் எதிர்பார்ப் பாகும். கைவினைப் பொருள்கள் தயாரிப்பில் எதிர்காலத்தில் மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும். அதற்கு வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு என்றும் கிடைக்கும் என நம்புகின்றேன் என்றார்.

பெண்களுக்கு முன்மாதிரியாக திகழும் இவரின் தொழில்துறை மேலும் மேன்மையடைய நிமிர்வு வாழ்த்துகின்றது.

**தொடர்புக்கு :- 0766575605**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

ஆசிரியர் பார்வை

# தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் தமிழ் மக்கள்

மீண்டும் ஒரு தடவை சர்வதேச முன்றலில் தமிழ் மக்கள் தமக்கு நீதி வழங்குமாறு கேட்டிருக்கிறார்கள். சர்வதேச விசாரணை கோரியும், காலநீடிப்பு வழங்க வேண்டாம் என வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் பெருமளவு மக்கள் திரண்டு கடையடைப்பும், கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடத்தினார்கள். ஐ.நா மனிதவுரிமைக் கவுன்சில் வழமைபோல தனது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

“பொறுப்புக்கூறலில் இலங்கை மெதுவாக செயற்படுகிறது.வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும், உள்ளக நீதிப் பொறிமுறையில் உரிய நீதி கிடைக்குமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.” என ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் இந்த 40 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பித்து பகிரங்கமாகவே சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு பதிலடியாக சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிப் பொறிமுறைக்கு ஒருபோதும் ஏற்க மாட்டோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஜெனீவாவில் வைத்து கூறியிருக்கிறார். சர்வதேசத்தின் கோரிக்கைகள் எவற்றுக்கும் இலங்கை செவிசாய்க்கப் போவதில்லை என்பது இதன்மூலம் அப்பட்டமாக தெரிகிறது.

அதேவேளை இக்கூட்டத் தொடருக்கு முன்னதாக சிறீலங்கா அதில் பங்கு பற்றக் கூடாதெனவும் அங்கு கொண்டு வரப்படும் பிரகடனத்துக்கு இணைஅனுசரணை வழங்கக் கூடாதெனவும் தெற்கில் பல குரல்கள் ஒலித்தன. இந்த ஆண்டு சிறீலங்காவுக்கு மேலும் இரு வருடம் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தாலும் அடுத்த வருடம் அரசாங்கம் இதில் பங்கு பற்றுமா என்பது கேள்விக்குறியே. அப்படி நிகழுமானால் ஐ.நா.ஊடாக சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு சீனா, அமெரிக்கா உள்ளிட்ட சிறீலங்காவின் நட்பு நாடுகள் உடன்படுமா என்பதும் கேள்விக்குறியே.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்றிலுமாக அழிக்க சிறீலங்கா அரசாங்கத்துக்கு உதவிய நாடுகளிடம் எமக்கு நீதியைப் பெற்றுத்தாருங்கள் என்று கேட்கும் நிலையில் நாம் இருப்பது தான் வேதனையானது. அந்த நாடுகள் இப்போது நல்ல வேடம் போடுகின்றன. தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூறல் விடயத்தில் மாறி மாறி வருகின்ற சிங்கள ஆட்சியாளர்களும் ஒரே கொள்கையினையே பின்பற்றி வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் இணைந்து தமிழ்மக்களின் நீதி கேட்கும் குரல்களைப் படிப்படியாக நீர்த்துப் போகச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இருந்தாலும், இவர்கள் எல்லோருக்கும் கேட்கும் படியாக எமது கோரிக்கைகளை மீண்டும் மீண்டும் ஐ.நா. மனித உரிமைக் குழுவில் உரத்துச் சொல்வோம். எமக்கு நீதி கிடைக்கும் வரை இப்போராட்டம் தொடர வேண்டியது அவசியம். அதற்கான பொது முன்னணி ஒன்றை த.தே.கூட்டமைப்பு உட்பட்ட முக்கிய அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் உருவாக்க வேண்டும்.

ஐ.நா மனித உரிமைக் கவுன்சிலில் எமது பிரச்சினைகள் பேசப்படும் போது அது சர்வதேசத்தில் இயங்கும் முற்போக்கு சக்திகளிடம் போய்ச் சேரும். அதனூடாக அவர்களுடன் அணியமைத்துக் கொண்டு எமக்கான தீர்வை அடைவதற்கான வழிவகைகளை ஆராய்வோம்.

அட்டைப்படம் – ஐ . சிவசாந்தன்

- செ. கிரிசாந் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நம் கடமை என்ன?

## முதல் தேவை முள்ளிவாய்க்கால் ஆவணக் காப்பகம்




இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் இனவழிப்பு நடந்த இடம் முள்ளிவாய்க்கால். காலத்துக்குக் காலம் பல படுகொலைகளை எதிர்கொண்ட ஈழத் தமிழினம் சந்தித்த மிகப்பெரும் அழிவு – அவலம் முள்ளிவாய்க்கால். இங்கு நடந்தேறிய அழிவுகள் – இழப்புகள் – அவலங்கள் ஏற்படுத்திச் சென்ற வடுக்கள் – வலிகள் – ரணங்கள் – வேதனைகள் – துன்ப, துயரங்கள் இன்னமும் நம்மை விட்டு விலகிவிட வில்லை – அதிலிருந்து நாம் மீண்டு விடவுமில்லை.

போர் முடிந்து 10 ஆண்டுகள் நிறைவடைந் தும்கூட அது ஏற்படுத்திய வடுக்களையும் – போர் தந்த அவலங்களையும் இன்னமும் நம்மினம் சுமந்து கொண்டுதான் நிற்கிறது. முள்ளிவாய்க்கால் படு கொலையை – தமிழ் இனத்தின் மீது திட்டமிட்டு

ஐங்கரன்

நடத்தப்பட்ட பேரழிப்பை 'முள்ளிவாய்க்கால் நினை வேந்தல்' எனப் பெயரிட்டு நினைவு கூருகிறது நம் இனம். கூடவே தனது வேணவாவையும் ஆற்றிக் கொள்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒவ் வொரு ஈழத் தமிழனும் தனது கடமையாகக் கொண்டிருக்கிறான் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. உரிமைப் போராட்டத்தை ஆதரித்தோரும் சரி – எதிர்த்தோரும் சரி போரில் படுகொலையான அப்பாவிப் பொதுமக்களை நினைவேந்துவதை எதிர்க்கவில்லை – நினைவு கூரவும் தவறவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவுகூரலில், நம்ம வர்கள் சிலரின் கடமை ஏற்பாடு செய்வதுடன் முடிந்து போய் விடுகிறது. பலரின் கடமை நிகழ்வில் பங் கேற்று வெகுஜன ஊடகங்களையும் தாண்டி அதிகம் நுகரப்படும் சமூகவலைத்தளங்களில் படங்கள் – பதிவு கள் – பகிர்வுகளுடன் முடிந்து போய்விடுகிறது. நம்மினத்துக்கு ஏற்பட்ட பெரும் அழிவுக்கு – நாம் கொடுத்த ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்கு – போரின் வடுக்களையும் – வலிகளையும் – ரணங் களையும் இன்னமும் சுமந்து கொண்டிருக்கும் நம்மில் பலருக்கும் நாம் செய்யும் கடமை இவ்வளவு தானா...?

### யூதர்களிடம் படிக்க வேண்டிய பாடம்!

ஜேர்மனியை ஹிட்லர் ஆட்சி செய்த காலம். யூத இனத்துக்கு எதிராக வெறுப்பை உமிழ்ந்த ஹிட்லர் யூதர்கள் மீது கொடூரமான சித்திரவதை களை கட்டவிழ்த்து விட்டான். குழந்தைகள் – சிறுவர்கள் – இளைஞர்கள் – முதியவர்கள் – ஆண்கள் – பெண்கள் என வகைதொகையின்றி ஹிட்லரின் படைகள் யூதர்களைக் கொன்று குவித்தது.

ஜேர்மனி தனது சாம்ராஜ்யத்தை விஸ்தரித்த போது இலட்சக்கணக்கானோரைக் கைது செய் தார்கள். இவ்வாறு பிடிபட்டவர்கள் ஹிட்லரின் படைக்கு எதிராகப் போரிட்டவர்களாகவோ அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சதிப்புரட்சி செய்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கவில்லை. குறைந்த பட்சம் ஒருவர் யூதராக இருந்தால் மட்டும் போதும் அவர் கைது செய்யப்படுவதற்கும் – தடுத்து வைக்கப்படுவதற்கும் – சித்திரவதைகளுக்கு உள்ளாவதற்கும் – கொல்லப்படுவதற்கும்.

கைது செய்யப்பட்ட யூதர்கள் வாகனங்களில் நெருக்கி ஏற்றப்படுவார்கள். அந்த வாகனங்கள் சிறப்பு வதை முகாம்களுக்கு யூதர்களை கொண்டு செல்லும். அங்கு அவர்கள் வேலை வாங்கப்படு வார்கள். அடிமைகளான அவர்களை சாதாரண மாக வேலை வாங்க மாட்டார்கள். மிகக் கடுமையாக வாங்குவார்கள். அவர்களுக்கு சரியான – போதிய உணவு கொடுக்க மாட்டார்கள். ஒருவருக்கு அதிக பட்சம் ஒரு பிடி உணவு கிடைத்தால் அதுவே அதிகம். தாகத்துக்கு தண்ணீர் கொடுக்க மாட்டார்கள். நித்திரைக்கு நேரமே ஒதுக்கமாட்டார்கள். அவ்வளவு கடுமையாக வேலை வாங்கப்பட்டார்கள். பெண்கள் என்றால் பாலியல் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள்.

கடும் வேலை, பசி, தாகம் என வதைக்கப் படுபவர்களை ஹிட்லரின் படைகள் விதம் விதமாக சித்திரவதைகள் செய்யும். (விளங்கிக் கொள்ள கடினப் படுவர்கள் கே.எவ்.ஜி திரைப்படத்தை பார்க்கலாம். ஆனால், ஹிட்லரின் சித்திரவதைகளுடன் ஒப்பிடு கையில் அத்திரைப்படத்தில் காட்டப்படுவது குறைவு தான்) வதைமுகாமில் வேலை செய்ய முடியாத வர்களுக்கு மரணம்தான் முடிவு. அதுவும் சாதார ணமாக இருந்து விடாது. சிலவேளைகளில் யூதர் களை எண்ணிக்கை கணக்கின்றி ஓரிடத்தில் அடைப் பார்கள். விச வாயுவை நிரப்புவார்கள். துடித்து விழுந்து மரணிப்போரை ரசிப்பார்கள் அல்லது உயிருடன் எரிப்பார்கள். இறுதியாக யூதர்கள் அணி யும் காப்புகளை எண்ணி இத்தனை பேர் இறந்தனர் என்று தகவல் அனுப்புவார்கள்.

இப்படி ஹிட்லரின் படைகளால் இவ்வாறு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்கள் 90 இலட்சம் தொடக்கம் ஒரு கோடியே 10 இலட்சம் பேர் வரை இருக்கலாம். இதில் யூதர்களின் எண்ணிக்கை மட்டும் 60 இலட்சம் பேர். இத்தகைய பெரும் இனவழிப்பை சந்தித்த இனம் இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் தனக்கென ஒரு தாயகத்தை உருவாக்கியது. அதுதான் இன்றைய இஸ்ரேல். யூதர்களுக்காக இஸ்ரேல் உருவாகி

**“இஸ்ரேலியர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் இனம் எப்படிப்பட்ட அழிவைச் சந்தித்தது என்பதை யாட் வாஷெம் சொல்லிக் கொண்டே இருக்கிறது. அவர்களுக்கு மட்டுமல்ல இஸ்ரேல் செல்லும் ஒவ்வொருவரும் யாட் வாஷெமிற்கு செல்கிறார்கள். உலகின் மிகப்பெரிய இனவழிப்பை – யூதர்கள் சந்தித்த துன்பங்களை ஆவணங்களாக இன்றும் சொல்கிறது – நாளையும் சொல்லிக் கொண்டே இருக்கும்”**

சரியாக 8 ஆண்டுகளில், அதாவது 1953 இல் ஓர் ஆவணக் காப்பகத்தை திறந்தார்கள். அதுதான் யாட் வாஷெம் (YadVashem).

யூதர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டார் கள், எத்தகைய சித்திரவதைகளை அனுபவித்தார்கள், படுகொலையானவர்களின் விபரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விபரம், அவர்கள் தொடர்பான படங்கள், படுகொலைகள் தொடர்பான ஆவணங்கள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், யூதப் படு கொலைகள் பற்றிய நூல்கள், காணொளிகள், உறவுகளின் சாட்சியங்கள் என அனைத்தும் ஒருங் கிணைந்துள்ளது யாட் வாஷெமில்.

இப்போதும் கூட, யாட் வாஷெமின் மாணவர் கள், ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள் யூதப் படுகொலைகள், யூதர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவற்றை ஆவணப்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேலியர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் இனம் எப்படிப்பட்ட அழிவைச் சந்தித்தது என்பதை யாட் வாஷெம் சொல்லிக் கொண்டே இருக்கிறது. அவர்களுக்கு மட்டுமல்ல இஸ்ரேல் செல்லும் ஒவ்வொருவரும் யாட் வாஷெமிற்கு செல்கிறார்கள். உலகின் மிகப்பெரிய இனவழிப்பை – யூதர்கள் சந்தித்த துன்பங்களை ஆவணங்களாக இன்றும் சொல்கிறது – நாளையும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

**முன்னுதாரணமாகும் ஜப்பான்**

இதுவும் இரண்டாம் உலகப் போரில் நடந்ததுதான். மேற்கில் ஜேர்மனி விழும் நிலையில் இருக்கிறது. ஆனால் ஆசியாவில் நிலைமை தலை கீழ். ஜேர்மனியுடன் அணி சேர்ந்து போரிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் உச்ச வெற்றி பெறும் நிலையில் இருக்கிறது. அணுகுண்டைக் கண்டுபிடித்த அமெரிக்கா அது ஏற்படுத்தக்கூடிய விளைவை – பாதிப்பை விஞ்ஞான ரீதியில் பரிசோதித்து விட்டது. ஆனால் அதன் விளைவை நேடியாகக் கண்டறிய வேண்டும் என்ற ஆசையில் இருந்தது. இதற்கான பரிசோதனைக் களமாக ஜப்பானைத் தீர்மானிக்கிறது.

ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்படுகின்றன. அதிகமல்ல இரண்டே இரண்டு குண்டுகள்தான் ஹிரோசிமாவில் 90,000 – 1,66,000 பேர் வரையிலும் நாகசாகியில் 60,000 – 80,000 பேர் வரையிலும் உடன் மரணித்தார்கள். இரு நகரங்களிலும் (இன்று வரை அணுகுண்டு தந்த பாதிப்பு முடியவில்லை. நீள் கதையாகத் தொடர்கிறது.) எந்தக் கட்டமும் இல்லை. வெறும் சாம்பல் மேடே காட்சியளித்தது. ஆனாலும் பல சேதங்களைக் கண்டு, எலும்புக்கூடாக நிற்கிறது ஒரு கட்டடம். அதுதான் ஜென்போகு டாம் (Genbaku Dome). நிமிர்ந்து நின்றாலும் போரின் வடுக்களை சுமந்து நிற்கிறது.

பேரிழப்பை சந்தித்தாலும், உடனடியாக மீண்டுவிடுகிறார்கள் ஜப்பானியர்கள். உழைப்புக்குப் பெயர் பெற்ற அவர்களின் கடின உழைப்பால் ஹிரோசிமாவும், நாகசாகியும் மீண்டும் எழுகின்றன. முன்னிருந்ததை விடவும் கம்பீரமான நகரங்களாக அவை எழுகின்றன. ஆனாலும் ஒன்று மட்டும் மாறவில்லை. அது அணுகுண்டையும் தாங்கி நின்ற ஜென்போகு டாமின் தோற்றம்.

ஆம் தங்களின் அழிவின் அடையாளமாக – அமெரிக்கா தங்களுக்கு இழைத்த அநீதியின் வடிவமாக – உயிரிழந்த இலட்சக்கணக்கான மக்களின் நினைவாக இன்றும் அது அப்படியே நிற்கிறது. நிற்பது மட்டுமல்ல ஜப்பானின் வருங் காலத்துக்கு தனக்கு நேர்ந்த கொடுமையை அது சொல்லிக் கொண்டிருக்கிறது. ஜப்பானை சுற்றிப் பார்க்கச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கள் நாட்டுக்கு நேர்ந்த அழிவை – இழப்பை அது சொல்லிக் கொண்டே இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கும் தனக்கு நேர்ந்த கொடுமைகளை அது சொல்லிக் கொண்டே இருக்கும்.

ஓர் இனம் – நாடு சந்தித்த பேரழிவை எப்படி நாம் ஆவணப்படுத்த வேண்டும் என்பதை யாட்வாஷெம், ஜென்போகு டாம் ஆகியவை நமக்கு கற்றுத் தருகின்றன. ஆனால் நாம் போர் ஆவணப் படுத்தலில் எவ்விதம் இருக்கிறோம்...?

### சந்தர்ப்பத்தைத் தொலைத்தவர்கள் நாம்

1981 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிராக சிங்கள ஆதிக்கவெறி பற்றி எரிந்த உச்சத் தருணம் அது. தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஞானம்ஸ் விடுதியில் தங்கியிருந்த அமைச்சர் காமினி திஸநாயக்கவும் சிறில்மத்தியூவும் திட்டமிட ரயில்களில் வந்து இறங்குகின்றது காடையர்கள் குழு. ஆங்காங்கு பற்ற வைக்கப்படுகின்றது இனவாதத் தீ. பொலிஸார், இராணுவத்தினரின் அமைதியான அனுமதியுடன் தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன. தமிழர்களின் கல்விச் சொத்தான யாழ். பொது நூலகம் தீயில் பொசுங்கிப் போகின்றது. சுமார் 96 ஆயிரம் புத்தகங்கள் சாம்பலாகின. இவற்றுல் பல மீளப் பெற முடியாத மூல நூல்கள், ஏட்டுச் சுவடிகளும் அடக்கம்.

எல்லாம் முடிந்து எலும்புக்கூடாக நிற்கிறது நூலகம். 2001 இல் ஆட்சியில் அமர்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. தமிழர்கள் மத்தியில் அக்கட்சிக்கு ஏற்பட்ட மாறாத கறைகளின் சாட்சியமாக – தமிழருக்கு இழைக்கப்பட்ட அழிவின் – அநீதிகளின் ஆதாரமாக நிற்கும் எரியுண்ட யாழ். பொது நூலகத்தை மீள அமைக்கத் துடிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம். இந்த முடிவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பெரும் தடையாகின்றனர். அருகில் இருக்கும் அரச காணியில் நூலகம் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுவாக முன் வைக்கப்படுகின்றது.

அனைத்து எதிர்ப்புகளையும் மீறி நூலகம் திருத்தியமைக்கப்படுகின்றது. இந்த சாட்சிய அழிப்புக்கு அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, அப்போதைய யாழ். மாநகர முதல்வர் செல்லன் கந்தையன், யாழ். மாநகர சபையின் ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் துணை நின்றனர். இதில் இன்னொரு முக்கிய விடயம் யாழ். பொது நூலகம் எரியூட்டப்பட்ட சமயத்திலும் சீ.வீ.கே. சிவஞானமே மாநகர சபை ஆணையாளர். (தன் காலத்தில் எரியூட்டப்பட்ட நூலகத்தை தன் காலத்திலேயே புனரமைத்து விட வேண்டும் என்ற அவா அவருக்குள் இருந்திருக்கலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியூட்டப்பட்ட நாளில் இருந்து சுமார் 20 ஆண்டுகள் தமிழின அழிப்பை – தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போரை – தமிழர் மீதான அடக்கு முறையை – ஓர் இனத்தின் புலமை அழிப்பை இனத்–தின் சந்ததிகளுக்கு பறைசாற்றிக் கொண்டிருந்த எரியுண்ட நூலகம் இன்று வரலாற்றை மறைத்துப் பொலிவுடன் நிற்கிறது. இந்த வகையில் நாம் இனஅழிப்பை ஆவணமாக்கும் சந்தர்ப்பத்தை தொலைத்த இனமாக நிற்கிறோம்.

**மீண்டும் ஓர் சந்தர்ப்பம்**

வரலாற்றின் நீட்சி இப்போது எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. எமது நீண்ட – கடின – வலிய ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப் போனது. எங்கள் உரிமைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்ததில் இராணுவமும் அரசும் வெற்றி பெற்றன. அதற்காக அது கையாண்ட உத்திகளால் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் பேரவலங்களைச் சந்தித்தார்கள். போரின் இறுதிநாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரத்தை எட்டும். இறுதிப் போரில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இதிலும் பல மடங்கு தொகையினர் காயங்கள் – அவயவங்கள் இழப்புக்கு உள்ளாகினர்.

போர் தொடங்கிய காலம் தொட்டு மூன்றரை இலட்சம் பேருக்கு சில நூறு பேருக்குப் போதுமான உணவைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்பட்டது. அதுவும் இறுதி ஆறு மாதங்களுக்கு மேலாக எந்த உணவுப் பொருளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அரசாங்கம் தொடுத்த பட்டினிப் போரால் பல குழந்தைகள் இறந்தன. பிறந்து உயிர் தப்பிய, இறந்து பிறந்த, பிறந்த சில நாள்களிலேயே உயிரிழந்த குழந்தைகளும் – மீறித் தப்பிய குழந்தைகள் எறிகணை தாக்குதல்களில் கொல்லப்பட்டமையுமே அதிகம். பால்மாவுக்காகவும், விடுதலைப் புலிகள் கொடுத்த கஞ்சிக்காகவும் காத்துக் கிடந்த சிறுவர்களையும், பொதுமக்களையும் விமானத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுகள் மூலம் கொன்று குவித்தது இராணுவம்.

சுமார் மூன்றரை சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் இரண்டரை தொடக்கம் மூன்று இலட்சம் பேர் நிறைந்து இருந்தார்கள். இராணுவம் சுற்றி வளைத்து நின்றது. தாக்குதல்களால் தினமும் மரணங்களும் – அவலக் குரல்களும் நிறைந்த முள்ளி வாய்க்கால் யுத்தபூமி அவலங்கள் நிறைந்த பூமியானது. எல்லாம் முடிந்த பின்னரும் முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு மீண்டும் அவலங்களை சந்தித்த மக்கள் சுமார் 2 ஆண்டுகளின் பின்னரே சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப் பட்டார்கள். முள்ளிவாய்க்கால் மக்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் மூன்றாண்டுகளுக்குப் பின்னரே கிடைத்தது. போரில் இறந்த தங்கள் உறவுகளுக்கு உயிரிழந்த இடங்களில் கடமைகளை செய்ய – அவர்களை நினைவுகூர அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரே இது சாத்தியமானது.

இந்த சாத்திய காலத்தைப் பயன்படுத்தி முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஒரு பகுதியை ஆவணமாக்கும் நடவடிக்கையை நாம் செய்யத் தவறிவிட்டோம். இப்போது நினைவேந்தல் செய்ய ஆரம்பித்து 4 ஆண்டுகள் கடந்தும் முள்ளிவாய்க்கால் பெரிய மாற்றத்தை சந்திக்கவில்லை. அவலங்களை சந்தித்த – போரின் வடுக்களை சுமந்த பூமியின் நிலை இன்னமும் மாறிவிடவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யார் நடத்துவது எனப் போட்டியிடுவோர் முள்ளிவாய்க்கால் பூமியை ஆவணப்படுத்த முன்வரவேண்டும்.

தாயகத்திலும் – உலகம் முழுவதும் பரந்துள்ள வரலாற்று ஆய்வாளர்கள், ஆவணக் காப்பாளர்கள் இதற்காக முன்வரவேண்டும். யாழ். பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையினர் இவர்களை ஒன்றிணைத்து செயற்பட வேண்டும். ஆவணப்படுத்தப்பட வேண்டிய பகுதியை அடையாளப்படுத்தி, அங்கு கிடக்கும் பொருட்களை அப்படியே பேண வழி செய்ய வேண்டும். நம்மிடம் அரசியல் பலம் இல்லை என்பதால், ஒரு பகுதி ஆவணங்களை வெளிநாடு ஒன்றில் பேணவும் வழி செய்ய வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள், வரலாற்றுத்துறையினர் அடையாளப்படுத்திய பகுதியை ஆவணப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டும். இந்தப் பகுதியை மக்கள், அரசிடமிருந்து பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை மக்களுடன் சேர்ந்து அனுபவித்த ஆவணக் காப்பாளர்கள் இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றனர். இதே போன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவணக் காப்பாளர்களாக செயற்பட்டவர்கள் புலம்பெயர் தேசங்களில் இயங்கும் ஊடகங்களுக்கு மக்களின் அவலங்களைப் பதிவு செய்து அனுப்பியிருந்தனர்.

இவர்களிடம் இருந்து குறித்த ஆவணங் களின் பிரதிகளைப் பெற்று முள்ளிவாய்க்காலில் ஆவணப் பேணகம் ஒன்றை அமைத்து காட்சிப்படுத்த வேண்டும். வருங்கால சந்ததிகள் எமது இனம் சந்தித்த அவலங்களைப் அறியவும் – புரியவும் இது ஒரு வாய்ப்பாகவும், சர்வதேச சமூகம் முள்ளிவாய்க்காலில் தமிழினம் சந்தித்த பேரவலத்தை உணர்ந்து கொள்ளவும் இந்த ஆவணப்படுத்தல் உதவும்.

இன்னமும் போர் பாதித்த தேசமாகவே முள்ளிவாய்க்கால் மண் நீண்டு கிடக்கிறது. ஓவியர்கள், ஓவிய மாணவர்கள் எஞ்சிக் கிடக்கும் போர் அழிவுகளை தமது தூரிகைகள் மூலம் பிரதி பலிக்கச் செய்யலாம். அதுமட்டுமின்றி போர் அவலங்களை சந்தித்தவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தும் முள்ளிவாய்க்கால் அவலங்களை ஓவியங்களாக்கி அமைக்கப்படும் ஆவணக் காப்பகத் தில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

ஜப்பானுக்கு சுற்றுப் பயணம் செல்பவர்கள் ஜென்போகு டாமை பார்வையிடுவது வழமை. இராஜீக விடயங்களாக அங்கு செல்லும் சர்வதேச நாடுகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் ஜென்போகு டாம் முன்பாக போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர். இவ்வளவும் ஏன்? ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசி இலட்சம் பேரின் அழிவுகளுக்குக் காரணமான அமெரிக்கா தனது செயலுக்கு மன்னிப்புக் கோரியது. காலம் தாழ்த்திய கோரல்தான் ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது நாட்டின் செயலுக்கு மன்னிப்புக் கோரியபோது போர் நினைவிடமான ஜென்போகு டாமின் முன்பாகவே மன்னிப்பைக் கோரினார்.

**“வருங்கால சந்ததிகள் எமது இனம் சந்தித்த அவலங்களைப் அறியவும் – புரியவும் இது ஒரு வாய்ப்பாகவும், சர்வதேச சமூகம் முள்ளிவாய்க்காலில் தமிழினம் சந்தித்த பேரவலத்தை உணர்ந்து கொள்ளவும் இந்த ஆவணப்படுத்தல் உதவும்”**

இதேபோல வடக்கு, கிழக்குக்கு சுற்றுப் பயணம் வருபவர்கள் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்களை அறிவதற்கும் – உணர்வதற்கும், புலம்பெயர் தேசங்களில் வாழும் நம் சந்ததிகள் தாய் தேசத்தில் தம்மினம் அடைந்த வலிகளை உணரவும் – இராஜீக விடயங்களுக்காக வடக்குக்கு வரும் சர்வதேச தலைவர்கள், இராஜதந்திரிகள் தமிழினம் பட்ட அவலத்தை அறியவும் – போரில் உயிரிழந்த மக்களை அனைவரும் அஞ்சலிக்கவும் – நம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அவலங்கள் – அடக்குமுறைகள் – உச்சக் கட்ட கொடுமைகளை அடுத்த தலைமுறையும் அறியச் செய்யவும் ஆவணக் காப்பகம் ஒன்று அவசியம்.

மேலும் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமைகள் மீறல், போர் குற்றங் களுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், இச்செயல்களுக்காக இலங்கை அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. காலம் வேக மானது – அது விதிக்கும் கட்டளைக்கு யாரும் அடிபணிந்துதான் ஆகவேண்டும். அமெரிக்காவுக்கு தோன்றிய மனச்சாட்சி – நெருக்கடி இப்போது இல்லாவிட்டாலும் இலங்கை அரசாங்கத்துக்கும் தோன்றலாம். அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமானால் அவர்கள் வெறுமனே மன்னிப்பு என்று கோராமல், எமது மக்கள் அவலங்களை சந்தித்த முள்ளிவாய்க கால் மண்ணில் – போர் வடுக்களை பாதுகாத்து வைத்திருக்கும் இடத்தில் கோர வேண்டும்.

நமக்கு – நம்மினத்துக்கு நேர்ந்த துன்பத்தின் – அவலத்தின் குரல்கள் காலத்துக்கும் ஆவணமாக ஒலிக்க வேண்டும். அதற்கு முதல் தேவை முள்ளிவாய்க்கால் ஆவணக் காப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிழக்கில் தொடரும் தற்கொலைகளும் இளையோர் சமூகமும்

**சுந்தரசபாநாயகம் சஞ்சீவன்.**
**(தற்காலிக போதனாசிரியர்)**
**நடன நாடகத்துறை,**
**சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

இலங்கையில் கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. இம் மாகாணத்தினுடைய தலைநகர் திருகோணமலை ஆகும். கிழக்கு மாகாணத்தின் பெரிய தலைநகரமாக மட்டக்களப்பு காணப்படுகின்றது. வடக்கே வடமாகாண எல்லையிலிருந்து தெற்கே தென்மாகாண எல்லை வரையுள்ள நீண்ட கரையோரம் இம் மாகாணத்தின் கீழ் வருகின்றது. இம் மாகாணத்தினுடைய அதிகார பூர்வமான மொழிகளாக தமிழ் மற்றும் சிங்களம் ஆகியவை காணப்படுகின்றன. இலங்கையில் புவியியல் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழரின் பல முக்கிய வரலாற்று தடங்களை தன்னிடம் கொண்டதாக கிழக்குமாகாணம் காணப்படுகிறது. இத்துடன் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களா, பறங்கியர் என பல் சமூக பண்பாட்டுப் பின்புலத்தை கொண்டதாகவும் விளங்குகிறது.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் போரும் அதனுடைய தாக்கவன்மைமிக்க செயற்பாடுகளும் அதனை வெகுவாக பாதித்தமை முக்கியமான விடயமாகும். அதன் பின்னரான தமிழர் அரசியல் மற்றும் இலங்கையின் பூகோள அரசியல் தாக்கங்களும் கிழக்கு மாகாணத்தையும் அதனுடைய மக்களையும் வெகுவாக பாதித்தன. தமிழர் பிரதேசங்களிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போருக்கு பின்னரான காலப்பகுதியில் துரிதகதியில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டதும், ஏற்படுத்தப் பட்டதும் அனைவரும் அறிந்ததே. இந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படைக் கட்டமைப்புக் களிலும் அதனுடைய பொருளாதார மற்றும் மனித வளங்கள் மீதும் பல மாற்றங்கள் ஏற்பட்டன, ஏற்படுத்தப்பட்டன.

இந்தவகையில் போரினது இறுக்கமான கட்டுக்குள்ளும் போரியல் காரணிகளின் தாக்கங் களுக்குள்ளும் ஒரு குறுகலான நெருக்கடிமிக்க பாலத்தின் ஊடாக பயணித்த மக்கள் கூட்டம் விரிவடைந்த புதிய கட்டமைப்பினூடாகவும் உலகமயமாக்கல் சிந்தனைகளுக்குள்ளாகவும் புதிய பண்பாட்டுக் கலாச்சார மாற்றங்களுக்கு ஊடாகவும் பல வர்த்தக பொருண்மிய திட்டங்களையும் கடந்து பயணிக்க வேண்டிய தேவைப்பாடு தோன்றியது. இதனைக் காரணங்களாகக் கொண்டு நவநாகரீக சிந்தனைவாத அடிப்படையில் அமைந்த பண்பாட்டியல் மாற்றங்கள் பல்வேறு ஊக்கிகளின் மூலமாக மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டது முக்கிய அம்சமாகும்.

இதில் முதலாவதும் முக்கியமானதுமாக விளங்குவது, தொ(ல்)லைக்காட்சி இதனுடைய வரவு என்பது போருக்கு முற்பட்ட காலத்திலே அமைந்திருப்பினும் கேபிள் (Cable Tv) இணைப்புக்கள் மற்றும் செயற்கைக்கோள் (Dish Antenna) இணைப்புகள் போரின் பின்னரே பெருமளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. இதிலும் அதிகமாக இந்திய தொ(ல்)லைக் காட்சி அலைவரிசைகளின் மூலமாக ஒளிபரப்பப் படும் தொடர் நாடகங்களும் (Tele-Drama) சில மெய்மை நிகழ்ச்சிகளும் (Reality Show) பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவற்றின் மூலமாக போதிக் கப்படும் பேதமையான கருத்தாடல்களும், போலித் தனமான ஆடம்பரங்களும், பகட்டான வாழ்வியல் சித்தரிப்புக்களும், தவறான காதல் கோட்பாடுகளும், முறையற்ற மனித வாழ்வியல் நடத்தைப் போக்கு களும் மக்கள் மனங்களில் ஆழமாகப் பதியவைக் கப்பட்டன. அவற்றின் ஊடாக மக்களின் மனோ வியல்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அடிப்படையான பூர்வீக வாழ்வியலின் மீதான பற்றுதலை விட்டு விலகி அவர்களைப் பயணிக்க வைத்துள்ளது எனலாம்.

தொடர் நாடகங்களிலும் (Tele-Drama) பிரபலமான மெய்மை நிகழ்ச்சிகளிலும் (Reality Show) காண்பிக்கப்படும் நிகழ்வுகளும் செயற் பாடுகளும் கவர்ச்சி மிக்கதாக காட்சிப்படுத்தப்படு கின்றன. இதனால் தமது வாழ்வியலையும் அவற்றைப் போன்று அமைத்துக் கொள்ளத் தூண்டும் அளவுக்கு மக்கள் மத்தியில் கருத்தியலை ஆழமாக வேரூன்ற வைத்திருப்பதைக் காணமுடிகிறது. இதன் மூலமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறை களும் போதைப்பொருள் மற்றும் மதுப்பாவனை களும் வன்முறைப்போக்கான வாழ்வியல் முறை களும் ஊக்குவிக்கப்படுகின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெ டுப்புக்களின் பிரகாரம் அதிகளவானவர்கள் தற் கொலை செய்து கொள்ளும் மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகிறது. இதில் 16 முதல் 30 வயது வரையிலான இளைஞர் யுவதிகளே அதிகமாக தற் கொலைகளில் மரணிப்பதாக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடு களுக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் மோசமான பொருளாதார நிலமையும் ஒரு காரணமாகின்றது. கிழக்கு மாகாணமானது கடல் வளத்தினையும், நன்னீர் வாவிகளையும், பசுமையான வயல் நிலங் களையும், மேய்ச்சல் நிலங்களையும், கால்நடை களையும் கொண்டிருக்கின்ற பொழுதும் பொரு ளாதாரரீதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இது எவ்வாறு சாத்தியம் ஆகும் என்ற கேள்வியானது அனைவரது மனங்களிலும் எழுவது இயல்பானது தான். இதற்குப் பல காரணிகள் பின்புலத்தில் காணப்படுவதை உன்னிப்பாக நோக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நிறுத்தப்பட்டுள்ளோம். தமிழர் மரபுவழிப் பண்பாடுகளையும் கலைகலாச் சார அம்சங்களையும் பல பூர்வீக வரலாற்று முக்கி யத்துவம் மிக்க பிரதேசங்களையும் தன்னகத்தே கொண்ட கிழக்குமண் கடந்த சில காலங்களாக எதிர் கொள்ளும் "தற்கொலை" என்ற சிக்கல் நிலமை விரிவாக நோக்கப்பட வேண்டியதும், இவை தொடர்பான தெளிவுபடுத்தல் சார்ந்த செயற் பாடுகள் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

இலங்கை அரசாங்கத்தினுடைய 2017 ஆம் ஆண்டின் தரவு அறிக்கையின் படி 2016 ஆம் ஆண்டு இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட 4.4 மில்லியன் மெற்றிக்தொன் நெல் உற்பத்தியில் 1.1 மில்லியன் மெற்றிக்தொன் நெல் கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்ததாக நாட்டினுடைய மீன்பிடியின் மொத்த உற்பத்தியில் 20 சதவீதமான உற்பத்தி கிழக்கு மாகாணத்தில் இருந்தே கிடைப்பதாக கூறப் பட்டுள்ளது. இலங்கை முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகள் அரசியல் கொள்கை வகுப்பாளர்களினால் ஆரம்பகாலம் தொடக்கம் தொடர்ச்சியாக ஒதுக்கு தல்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளன, வரு கின்றன. எனினும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற பொழுது கிழக்கினுடைய நிலை என்பது பொருளாதார ரீதியாகவும் அபி விருத்தி ரீதியாகவும் மோசமான நிலையில் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாகும். நவீன மயப்படுத்தப்பட்ட வீதிகளும், உணவு விடுதிகளும், நவீன பல்பொருள் அங்காடிகளும், வணிக வங்கி களும், வர்த்தக முதலீட்டு நிதிநிறுவனங்களும் தோற்றம் பெறுவது என்பது மாத்திரம் நிலையான அபிவிருத்தியோ, முன்னேற்றமோ அல்ல. மாறாக மக்களுடையதும், விவசாயிகள், மீனவர்கள்

**"ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற பொழுது கிழக்கினுடையநிலை என்பது பொருளாதார ரீதியாகவும் அபிவிருத்தி ரீதியாகவும் மோசமான நிலையில் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாகும்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருடையதும் வாழ்வாதார, பொருளாதார அடிப்படையிலான உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வியல் மேம்பாடு என்பவையும், தனிமனித அபிவிருத்தி தொடர்பான தேவைகளும் அபிலாசைகளும் எப்பொழுது பூர்த்தி செய்யப்படும் வகையில் முழுமையான நிலையான அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறதோ அதுவே உண்மையான அபிவிருத்தியாகும். இதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பும் ஆகும். அரசாங்கம் எத்தனையோ திட்டங்களை பொருளாதார, வாழ்வியல் தேவைகளுக்கான தீர்வாக முன்வைக்கின்ற போதிலும் அந்த திட்டங்கள் எந்த அளவுக்கு வெற்றி பெறுகின்றன என்பதும், மக்கள் மத்தியில் எந்தளவு தூரம் சென்றடைகின்றன என்பதுவும் இன்று வரை விடை தெரியாத வினாக்களாகவே இருந்து வருகின்றன.

இலங்கையினுடைய பொருளாதார உற்பத்தியில் குறிப்பிட்ட அளவில் பங்குவகிக்கின்ற அரிசி, பால், மீன் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்ற பிராந்தியமொன்று அதிகமான வறுமையையும் போசாக்கு குறைபாட்டினையும் கொண்டிருப்பது என்பது ஏற்றுகொள்ள முடியாத விடயமாகும். இவற்றுடன் அரசினுடைய 2016 இன் வீட்டு வருமானம் மற்றும் செலவுக்கணக்கெடுப்பின் படி கிழக்கு மாகாணத்தினுடைய வறுமையின் அளவு 7.3 சதவீதமாக காணப்படுகிறது. குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வறுமையின் அளவு 11.3சதவீதம் 10சதவீதம் என்ற வகையிலாக காணப்படுகின்றது.

**இவற்றுடன் பாடசாலை செல்லாத சிறுவர்கள், மந்த போசணையுள்ளோர்களின் அளவு அதிகமாக காணப்படுவதும் இப் பிரதேசத்திலேயே ஆகும். அத்துடன் மட்டக்களப்பின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள படுவான்கரைப் பகுதியில் ஆறு பிரதேச செயலகப்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பிராந்தியங்களிலேயே பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திய மாணவர்களும் மந்தபோசணை பிரச்சனை உள்ளவர்களும் அதிகமாக காணப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த நிலையில் போரும் போருக்குப் பின்னரான பாதிப்பு நிலமைகளும் மீள குடியமர்வு செயற்பாடுகளும் சமூக அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்களும் முழுமையான வகையில் பூர்த்தி செய்யப்படவில்லை எனலாம்.**

அத்துடன் 2016ஆம் ஆண்டு 97 தற்கொலை மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 2017 ஆம் ஆண்டு 116 தற்கொலை மரணங்களும் 2018 ஆம் ஆண்டு 76 வரையான தற்கொலை மரணங்களும் இடம் பெற்றதாக வைத்தியசாலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவை ஆரோக்கியமான விடயங்கள் அல்ல.

இவை தொடர்பாக உளவளத்துணையாளரும் யோகா பயிற்றுவிப்பாளருமான சர்வதேச உள ஆற்றுப்படுத்தல் கல்லூரியைச் சேர்ந்த மதுர நாயகம் நேசராஜ் அவர்களுடன் கலந்துரையாடிய பொழுது அவர் பல முக்கியமான விடயங்களைத் தெரிவித்தார். பொதுவாக கிழக்கு மாகாணம் என்ற வரையறைக்குள் மாத்திரம் அல்லாது அனைத்து தமிழ்மக்களுக்கும் பொதுவான பல பிரச்சினைகளைப் பற்றியும் அவற்றிற்குரிய தீர்வுகளைப் பற்றியும் பல ஆரோக்கியமான விடயங்களை முன் வைத்தார். பொதுவாக இளையோர் மத்தியிலும் சிறுவர் உளவியலிலும் பல்வேறு விடயங்கள் மற்றும் காரணிகள் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக குறிப்பிடுகிறார். அதாவது புலமைப்பரிசில் பரீட்சை என்ற போட்டிக் கல்வி முறையில் இந்த விடயம் முதலில் ஆரம்பிக்கிறது. ஆரோக்கியமாகவும் மனத்துணிவுடனும் எதிர்கொள்ளமுடியாமல் சிக்கல்களையும் சவால்களையும் கண்டு அச்சமடைகின்ற போக்கினையும் மன நிலையினையும் இளையோர் மத்தியில் இது ஏற்படுத்துகிறது. இந்த நிலையைக் களைய வேண்டியது அனைவரது கைகளிலும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்.

தற்கால இளையோர் சமூகமானது ஆரோக்கியமானதும் முன்னேற்றகரமானதுமான சூழலிலும் தமது பயணத்தை ஒரு புறமாக முன்னெடுத்து வருகின்ற போதிலும் உலகமயமாதலின் தாக்கத்தினால் பிழையான நெறிபிறழ்வான வாழ்வியல் உந்தல்களுக்கூடாகவும் இளையோர் சமூகம் பயணிப்பதென்பது மறுக்கமுடியாத ஒன்றேயாகும். "ஆடம்பரமான மோட்டார் சைக்கிள்களை பெற்றோர் வாங்கித்தரவில்லை", "ஆசைப்பட்ட கைபேசியை பெற்றோர் வாங்கித் தரவில்லை", "புதிய சேலையைக் கணவன் வாங்கித்தரவில்லை", "காதல் விடயங்களில் சமூகமான முடிவுகள் எட்டப்படவில்லை" என்பது போன்ற பிரச்சினைகளும் "எடுத்த லோன் (கடனை) செலுத்த முடியவில்லை" என்பதும் பலரது தற்கொலைகளுக்கான உடனடிக் காரணங்களாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பிரச்சினைகளை எவ்வாறு ஆரோக்கியமான வகையில் கையாள்வதற்கும், இவற்றுக்கான முறையான வழிபடுத்தல்களும், ஆற்றுபடுத்தல்களும், உளவியல் ஆற்றுபடுத்தல் திட்டங்களும் பரவலாக முன்னெடுக்கப்படுகின்ற பொழுதும் அது "நத்தை வேகத்திலேயே" முன்னெடுக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். ஊருக்குள் திடீரென அறிமுகப்படுத்தபடும் கடன் திட்டங்கள் தொடர்பான முறையான விழிப்புணர்வும், தெளிவுபடுத்தல்களும் மக்களுக்கு வழங்கப்படக் கூடிய முறையான செயற்பாடுகள் இடம் பெறவேண்டும். அத்துடன் கடன் தொடர்பான ஒப்பந்த படிவங்கள், அதில் கையெழுத்திடுதல் கடன் திட்டங்கள் மற்றும் சாதக பாதகங்கள், அவற்றின் விதிகள், நிபந்தனைகள் என்பன பற்றிய தெளிவான கருத்தியல் மக்கள் மத்தியில் விதைக்கப்படவேண்டும்.

இவற்றுடன் பாடசாலைகளிலும், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களிலும் முறையாக பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சி பெற்ற அனுபவம் மிக்க "உளவளத்துணையாளர்கள்" நியமிக்கப்பட வேண்டியது கட்டாயத் தேவையாக கிழக்கு மாகாணத்தில் உருவெடுத்துள்ளதாக புத்தி ஜீவிகள் தெரிவிக்கின்றனர். பாடசாலை மட்டத்திலேயே சிறுவர்களுக்கும், இளையோர்களுக்கும் பலமான மனோதிடத்துக்கான அடித்தளம் இடப்படும் வேளை அவர்கள் தம்மைத் தாமே ஆற்றுப்படுத்தும் சிறந்த ஆளுமை மிக்க எதிர்கால சந்ததியாக உருவாகி முன்னோடிகளாக செயற்படுபவர் என்பது திண்ணம்.

மனிதன் என்பவன் தான், தன்னை சுற்றியுள்ள சூழல், அதிலுள்ள சக மனிதர்கள், தனது சமூகம் என்பவை மீதான கரிசனையும் அக்கறையும் கொள்வதோடு சுயநலமானதும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவதை கைவிடுகின்ற பொழுதில் மாத்திரமே ஆரோக்கியமான மனித சமுதாயத்தினையும் மனோதிடம் மிக்க எதிர்கால சந்ததியினரையும் உருவாக்க முடியும். மதுரநாயகம் நேசராஜ் அவர்கள் மேலும் கூறுகையில், இளைஞனோ யுவதியோ தற்கொலையில் ஈடுபட்டு மரணிக்கின்ற பொழுது அவர்களைச் சுற்றியுள்ள அனைவரும் அதற்குப் பொறுப்பாளிகளாகவே இருக்கின்றார்கள். மாறிவரும் நவீன யுகத்தின் உலகமயமாகிய வாழ்வியல் முறைகளாலும் மின்னல் வேக மாற்றங்களாலும் அருகில் இருப்பவரோடு

## "கைக்குள் அடக்கமான கைபேசிகளுக்குள்ளே மனிதர்கள் ஒவ்வொருவருடைய மனங்களும் அடங்கிக் கிடப்பதும் வேதனையான விடயமாகும்"

பரிவாக ஒரு வார்த்தை பேசுகின்ற மனிதர்களும், எதிர்வீட்டிலோ அயலவர்களுடனோ ஆரோக்கிய மான உரையாடல்களில் ஈடுபடும் மனிதர்களும் கொஞ்சம் கொஞ்சமாக அருகி வருகிறார்கள். கைக்குள் அடக்கமான கைபேசிகளுக்குள்ளே மனிதர்கள் ஒவ்வொருவருடைய மனங்களும் அடங்கிக் கிடப்பதும் வேதனையான விடய மாகும். இறுதியாக மதுப்பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனை என்பது இளையோர் சமுதாயத்தில் காணப்படும் பாரதூரமானதும் சிக்கலானதுமான பிரச்சினையாகும்.

நவநாகரீக பண்பாட்டு மாற்றங்கள், கலாச்சாரப் பிறழ்வான நடத்தைகள், தென்னிந்திய திரைப்படங்களின் ஆரோக்கியமற்ற கதாநாயகத்தன மான (Heroism) செயற்பாடுகள், மேலைத்தேய தாக்கங்கள் போன்றவை தொடர்பான புரிதல்கள் ஏற்படவேண்டும். இவற்றிலிருந்து இளையோரை மீட்டெடுக்க உரிய தரப்புக்கள் நடவடிக்கை மேற்கொள்வதோடு அவை துரிதகதியில் பரவலாக முன்னெடுக்கப்படுவதும் காலத்தின் தேவையாகும்.

தற்கொலை என்பதும் அவை சம்பந்தமான எண்ணப்பாடுகளும் மாற்றப்பட வேண்டுமெனின் பலமானதும் திடமானதுமான மன வலுப்படுத்தல்களும், உளவள ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். பாரம்பரிய கலைகள், பண்பாடுகளிலும் ஆக்க பூர்வமான விடயங்களிலும் இளையோரை ஈடுபடுத்த வேண்டும். நிலைபேறானதும் முன்னேற்றகரமானதுமான உட்கட்டமைப்பு, வாழ்வாதார அபிருத்தி ஏற்படுத்தப்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்த்தப்பட வேண்டும். போதைப் பொருளற்ற சமூகத்தின் உருவாக்கம் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவற்றின் ஊடாக தற்கொலைகள் அற்ற சுபீட்சமான கிழக்கினைக் கட்டியெழுப்ப முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகள் விவகாரம் மனித உரிமை சார்ந்தது மட்டுமல்ல அரசியல் சார்ந்தது

தொகுப்பு : செல்வநாயகம் .ரவிசாந்



**“எங்களுடைய பாதுகாப்பிற்காக எழுந்து நின்றவர்கள், எங்களுடைய பாதுகாப்பிற்காகத் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் எங்களுடைய பாதுகாப்பிற்காகத் தற்போது சிறைகளில் வாடிக் கொண்டிருப்பவர்கள் தான் அரசியல் கைதிகள்”**

எங்களுடைய பாதுகாப்பிற்காக எழுந்து நின்றவர்கள், எங்களுடைய பாதுகாப்பிற்காகத் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் எங்களுடைய பாதுகாப்பிற்காகத் தற்போது சிறைகளில் வாடிக் கொண்டிருப்பவர்கள் தான் அரசியல் கைதிகள். எனவே தான் அரசியல்க்கைதிகளைப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டாமென எங்களுடைய அமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. பொது மன்னிப்பு என்பது குற்றவாளிகளுக்குரியது. ஆனால், அரசியல்கைதிகள் என்பவர்கள் குற்றவாளிகளல்லர். அரசியல்கைதிகளினுடைய பிரச்சினை என்பது மனித வுரிமை சார்ந்தது மட்டுமல்ல அது அரசியல் சார்ந்த பிரச்சினை. அரசியல்கைதிகளை விடுவிப்பதற்கான அரசியல்தீர்வை நாம் தேடிப் பார்க்க வேண்டும் என அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

“ஜெனீவாவும் ஈழத்தமிழரின் மனித உரிமை நகர்வும்” எனும் தலைப்பிலான கருத்தரங்கு 06.03.2019 அன்று புதன்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் சட்ட ரீதியாகவும், யாப்பு ரீதியாகவும் தமிழ் மக்கள் தூரப்படுத்தப்பட்டார்கள். எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் துணிவற்றவர்கள் சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். அதேபோன்று யாப்புக்கள் ஊடாகத் தங்களுக்கான பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொண்டு ஆயுதங்கள் ஊடாக எங்களுக்குப் பதில் கொடுக்க முனைந்தார்கள். இவ்வாறான நிலையில் தான் நாங்கள் எங்களுடைய பாதுகாப்பிற்காக எழுந்து நிற்க வேண்டிய தேவையேற்பட்டது.**

எங்களுடைய அரசியல், நிலம், மொழி, கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கிய தேசியத்தை அழிப்பதற்கு முனைப்புக் காட்டப்படும் போதே அதனை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் தான் கடந்த– 1979 இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டமே ஒரு பயங்கரமானது.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பன்முகங் கொண்டதொரு கொடிய மிருகமென நான் அடையாளப்படுத்துகின்றேன். நாகரீகமடைந்த எந்தவொரு நாட்டினதும் சட்டப் புத்தகத்தில் இதுவொரு கறையாகவே பதியப்படுகின்றது. இவ்வாறு தான் சட்ட வல்லுனர்களும் கூறுகிறார்கள்.

என்னுடைய பார்வையில் தெற்கின் இனவாத அரசுகள் தாங்கள் யாரென்பதை இந்தச் சட்டப் புத்தகத்தின் ஊடாக நிரூபித்துள்ளனர். இந்தச் சட்டப் புத்தகத்தின் ஊடாக அரச பயங்கரவாதம் என்றால் என்ன, அந்த அரச பயங்கரவாதத்திற்குத் துணை நிற்கின்ற இராணுவம் எப்படிப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அரச பயங்கரவாதத்திற்குத் துணை நிற்கின்ற கட்சிகள், ஆட்சியாளர்கள் தங்களைப் பாதுகாக்கின்ற விதமெல்லாம் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குள் உள்ளடங்கியுள்ளது.

கடந்த கால அனுபவங்களால் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேசமும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் தான் இந்தச் சட்டத்தை மாற்றுமாறு சர்வதேசமும் கூறிக் கொண்டிருக்கின்றது. ஆனால், இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நாற்பது வருடங்கள் கடந்துள்ள போதும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றப்படாதது மாத்திரமல்லாமல் இதனை விடப் பயங்கரமானதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் முனைப்புக் காட்டி வருகிறார்கள். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் புதிய சட்டத்தின் படி நீக்கப்பட்டாலும் கூட அரசியல் கைதிகளைப் பொறுத்தவரை இந்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டதன் பின்னர் தான் அந்தச் சட்டம் அகற்றப்படும். எனவே, அரசியல்கைதிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது தான் இந்த அரசின் நோக்கமாக அமைந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படி எந்தவொரு நபரையும், எந்த வேளையும் கைது செய்யலாம். இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சாட்சியங்களைப் பின்னர் தேடிக் கொள்ளலாம். இவ்வாறு கைது செய்வதற்கு சாட்சியங்கள் தேவையில்லை.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு அவர்களது வழக்கு முடியும் வரை அல்லது தண்டனை முடியும் வரை பிணை வழங்கப்பட மாட்டாது.

சாதாரணதொரு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அவர்களுடைய விசாரணைக் காலம் முடிவடைந்த பின்னர் தண்டனை பெற்று வெளியே வரலாம். ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் தண்டனைக் காலம் முடிவடைந்த பின்னர் தான் வெளியே வர முடியும்.

இதன்காரணமாக 15 வருடம், 20 வருடம் அல்லது அதற்கு அதிகமான காலங்கள் கூட அரசியற் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**“எங்களுடைய தேசியத்தை, எங்களுடைய இனத்தை, மொழியை, கலாசாரத்தை, மக்களைப் பாதுகாப்பதற்காக எழுந்து நின்றவர்கள் தான் தற்போது அரசியல் கைதிகளாகவுள்ளனர்”**

ஆகவே, இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக இன்றைய அரசாங்கம், கடந்த கால ஆட்சியாளர்கள் எதிர்பார்த்த விடயம் தமிழ் இளைஞர்கள் அரசியலிலிருந்து தூரமாக வேண்டுமென்பது தான்.

தற்போது அரசியல்கைதிகளாக சிறைகளில் வாடுபவர்கள் கூட தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விலகி தாம் வெளியே வர வேண்டுமென்பதற்காகப் பல்வேறு எதிர்பார்ப்புக்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

### பல்வேறு சித்திரவதைகளுக்குள்ளான அரசியல் கைதிகள்

எங்களுடைய தேசியத்தை, எங்களுடைய இனத்தை, மொழியை, கலாசாரத்தை, மக்களைப் பாதுகாப்பதற்காக எழுந்துநின்றவர்கள் தான் தற்போது அரசியல் கைதிகளாகவுள்ளனர்.

அரசியல்கைதிகள் கைது செய்யப்பட்ட விடயத்தில், அவர்கள் விசாரிக்கப்பட்ட விடயத்தில், அவர்களுடைய நீதிமன்ற நடவடிக்கைகளில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர். செய்யாத குற்றங்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. ஒருவர் மீது எட்டு அல்லது ஒன்பது வழக்குகள் கூடப் புனையப்பட்டுள்ளன. பல்வேறு சித்திரவதைகளுக்குப் பின்னர் தெரியாத மொழியில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளை விசாரிக்க எடுக்கின்ற காலங்கள் மிக நீண்டகாலமாகக் காணப்படுவதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு அழைக் கிறார்கள். இதன் காரணமாக அரசியல் கைதியொரு வருடைய வாழ்நாள் முழுவதும் நீதிமன்றத்திற்குச் செல்கின்ற காலமாகவும், சிறைச்சாலையிலேயே தங்கியிருக்க வேண்டிய காலமாகவும் காணப்படு கின்றது. இதன் காரணமாக குற்றவாளிகளாக்கப் பட்டுள்ள அரசியல்கைதிகள் குற்றங்களை ஏற்றுக் கொண்டு வெளியே வருவோமென நினைக்கிறார் கள்.

சிறைகளில் வாடும் அரசியல்கைதிகளின் குடும்பங்கள் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பலருடைய மனைவிமார் கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக மாறியுள்ள னர். பெற்றோர்களும் பல்வேறு நோய்கள் காரண மாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது பிள்ளை களுடைய எதிர்காலத்தை நினைத்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவதுடன் பலர் இறந்துமிருக்கிறார்கள்.

**அரசியல் கைதிகள் விவகாரமும் கட்சிகளும்**

அரசியல் கைதிகளை விடுவிப்பதற்காக அரசியல்த் தீர்வை தேடிப் பார்க்க வேண்டும். இந்த விடயத்தில் யாரெல்லாம் எங்களுடன் காணப்படு கிறார்கள் என்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த–2018 சித்திரை மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று கொண்டு வரப்பட்டது. அந்த நம்பிக் கையில்லாத் தீர்மானத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்காகப் பத்துக் கோரிக்கைகளை முன்வைத்தது. அதில் ஒரு கோரிக்கை அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாக அமைந்திருந்தது.

**“சிறைகளில் வாடும் அரசியல்கைதிகளின் குடும்பங்கள் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பலருடைய மனைவிமார்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக மாறியுள்ளனர். பெற்றோர்களும் பல்வேறு நோய்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது பிள்ளைகளுடைய எதிர்காலத்தை நினைத்து மனநிலை பாதிக்கப்பட்டவர் களாக காணப்படுவதுடன் பலர் இறந்துமிருக்கிறார்கள்”**

கடந்த வருடம் ஆடி மாதம் அப்போது எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த சம்பந்தனைச் சந்திக்கச் சென்ற போது வெளிநாட்டுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி இன்னும் இரண்டு கிழமைகளில் வந்து விடுவார். நாங்கள் அவருடன் அரசியல் கைதி களின் விவகாரம் தொடர்பில் உரையாடவுள்ளோம் எனக் கூறினார். ஆனால், எத்தகைய முன்நகர்வு களும் இடம்பெறவில்லை என்பதே உண்மை.

கடந்த ஐப்பசி மாதம் நடைபெற்ற அரசியல் சதி நடவடிக்கையின் போது கூட அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் ஒரு கட்டத்தில் உச்ச நிலையை அடைந்தது. இவ்வாறான நிலையில் தான் மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச அரசியல் கைதிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய் கிறார். இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், வியாழேந் திரன் ஆகியோரை உள்ளடக்கிய உப குழு வொன்றும் அமைக்கப்படுகிறது. இவர்கள் அனை வரும் எங்களால் ஒதுக்கப்பட்டவர்கள்.

இவ்வாறானவர்களைத் தான் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அனுப்புகின்றார்கள். அரசியற் கைதிகள் எங்களுக்குச் செய்தி அனுப்பு கிறார்கள். மகிந்த ராஜபக்சவுக்கு சம்பந்தன் ஆதர வளிக்க வேண்டுமென்பதே அந்தச் செய்தி. அதற்குப் பதிலாக நான் அனுப்பிய செய்தியில் நாமல் ராஜபக்சவை என்னுடன் கதைக்குமாறு தெரிவித் திருந்தேன். ஆனால், அதற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

கடந்த தீபாவளி தினத்தன்று அலரி மாளிகை யில் நடந்த தீபாவளிப் பண்டிகையின் போது அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான மானியங்களை நாங்கள் தேடிக் கொண்டிருக் கின்றோம், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இதுதொடர்பாக கதைத்துக் கொண்டிருக்கின்றோம் எனத் தற்போதைய ஜனாதிபதி கூறினார். ஆனால், கடந்த மார்கழி மாதம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மீண்டும் பிரதமர் பதவியைக் கையளிக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்கைதிகளை விடுதலை செய்ய மாட்டோம் எனக் கூறினார்.

ஆகவே, தங்களுடைய அரசியல் நலன்களுக் காகவே இவ்வாறெல்லாம் எங்கள் அரசியல் கைதிகள் விவகாரத்தைக் கையாளுகிறார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கூட தங்களுடைய அரசியலுக்காகத் தான் அரசியல் கைதிகள் விவகாரத் தைக் கையாள நினைக்கின்றார்கள். இதன் காரண மாக எங்களால் தூரமாக்கப்பட்ட நிலையில் தான் இவர்கள் தற்போது தங்கள் அரசியல் செயற் பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எங்களுடைய அரசியல்வாதிகளெனில் அரசி யல் தீர்மானமெடுத்து, எந்தவித நிபந்தனையு மின்றி அரசியல்கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையையே முன்வைக்க வேண்டும்.

**ஆனால், பொது மன்னிப்பின் அடிப்படை யில் அரசியல்கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென தமிழ் அரசியல்வாதிகள் பலரும் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுபவர்கள் எங்களுடைய அரசியல்வாதிகள் கிடையாது. அவ்வாறு அவர்கள் கூறுவதன் மூலம் அரசாங்கம், நீதிமன்றம் என்பன குற்றவாளிகள் எனத் தீர்ப்பெழுதுவதற்கு முன்ன தாகவே குற்றவாளிகள் என இவர்கள் முடிவு செய் கிறார்கள். இவர்களைத் தான் நாம் சிறையி லடைக்க வேண்டும். இவர்களுக்கு மக்களாகிய நாம் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும். அது ஜனநாயகத் தீர்ப்பாகவே அமைய வேண்டும்.**

**இதுதான் மனிதவுரிமையா?**

போர்க் குற்றங்களில் ஈடுபட்ட குற்றச் சாட்டிற்காக மகிந்த, மைத்திரி மட்டுமல்ல ஐ.நாவும் தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல இலங்கையில் நடந்த யுத்தத் திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நாடுகளும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். அதேபோன்று இந்தியாவும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். இவர்கள் அனைவரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு ஐ. நா ஆயத்த மாகவிருக்கின்றதா? இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்தக் கேள்வியை எழுப்ப விரும்புகின்றேன்.

**"எமக்கான பாதுகாப்பு என்பது சுயநிர்ணய உரிமை ஊடான எமது பிரதேசத்தை நாமே ஆளுகின்ற தொரு ஆட்சி முறை. இதன் மூலமே எங்களுடைய பாதுகாப்பு சாத்தியப்படும். மிகப் பெரிய இன அழிப்பிற்கு நாங்கள் முகம் கொடுத் துள்ளமையால் இதனைப் பெற்றுக் கொள்வதற்கான முழு உரிமையும் எங்களுக்கிருக்கிறது"**

தங்களுடைய குற்றங்களை மறைப்பதற்காக இலங்கைக்கு இன்னும் இரண்டு வருட கால அவகாசத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய சாட்சிகள் தற்போது ஒவ்வொருவராக இறந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான சாட்சிகள் மறைய வேண்டுமென்பது தான் ஐ.நாவின் தேவையாகவுள்ளதா? இதுதான் மனிதவுரிமையா?

எனவே, அரசியல்கைதிகளினுடைய பிரச்சினை என்பது மனிதவுரிமை சார்ந்தது மட்டு மல்ல அரசியல் சார்ந்த பிரச்சினை. இந்த அரசி யல் சார்ந்த பிரச்சினையை சரியாக அணுக வேண்டு மானால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஆட்சியாளர்கள் முற்படுத்தப்பட வேண்டும்.

அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகத் தீர்ப்பு வரட்டும். அந்தத் தீர்ப்பின் ஊடாக எங்களு டைய இறைமை, ஆளுமை, எங்களுடைய அரசி யல் நிலைப்பாடு என்பவற்றைப் பாதுகாத்துக் கொள் வதற்கான பாதுகாப்புக் கிடைக்குமென எதிர்பார்க் கின்றோம்.

எமக்கான பாதுகாப்பு என்பது சுயநிர்ணய உரிமை ஊடாக எமது பிரதேசத்தை நாமே ஆளுகின்றதொரு ஆட்சி முறை. இதன் மூலமே எங்களுடைய பாதுகாப்பு சாத்தியப்படும். மிகப் பெரிய இன அழிப்பிற்கு நாங்கள் முகம் கொடுத் துள்ளமையால் இதனைப் பெற்றுக் கொள்வதற்கான முழு உரிமையும் எங்களுக்கிருக்கிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித அபிவிருத்தியே சமூக அபிவிருத்தி



கி.சிவரஞ்சினி,
கல்வி பிள்ளை நலத்துறை (சிறப்பு கற்கை), கிழக்குப்பல்கலைக்கழகம்.

இன்றைய நவீன சூழலில் சமூகத்தின் அசைவியக்கத்தைத் தூண்டும் முக்கிய காரணிகளில் தனிமனிதர்களது செயற்பாடும் ஒன்றாகும். தனிமனிதனும் சமூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக நின்று அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்களைத் தூண்டும் நிகழ்வுகள் வரவேற்கத்தக்கது. தனிமனிதர்களின் நடத்தை, செயற்படும் விதம், வெளிப்படுத்தும் திறமை என்பவை சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். தனி மனிதனின் விருத்தியும், முன்னேற்றமும் மாற்றமும், கொள்கைகளும், அறிவியலும் பிரதிபலிக்கும் இடம் சமூகம் ஆகும். எனவே தான் மனிதர்கள் தனித்து வாழ்வதை விட்டு சமூகத்தில் நிலைத்து வாழ தலைப்பட்டுள்ளனர்.

காலம் செல்ல செல்ல தனிமனிதனின் தேவைகளும் அதிகரிக்கத் தொடங்கின. இதனால் பல்வேறு தொழில்களைத் தேடி சமூக நிறுவனங்களை நாடினான். அவை தனிமனிதனுக்கு உயர் அந்தஸ்தை வழங்கின. கிரேக்க தத்துவ அறிஞர் அரிஸ்டோட்டில் “மனிதன் ஒரு சமூகப் பிராணி” என எடுத்துக் கூறினார். தனிமனிதர்களின் அபிவிருத்தியே சமூக அபிவிருத்தி ஆகும்.

மனிதனானவன் தனது வாழ்வில் அடைந்த முன்னேற்றங்களுக்கும், அறிவியல் சார் பரிமாண வளர்ச்சிக்கும் பிரதான காரணம் கல்வி ஆகும். அந்த வகையில் கல்வி என்பது அறிவை மட்டும் அல்லாமல் மாணவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து வாழ்வதைப் பற்றிக் கற்க உதவுகின்றது. வீட்டிற்கும் நாட்டிற்கும் உதவுகின்ற விழுமியங்களை கற்க உதவுகின்றது. சவால்களை எதிர் கொள்ளும் தன்மையை வளர்க்க உதவுகின்றது. மனிதன் அவற்றை சமூகத்தில் பயன்படுத்த எத்தனிக்கும் போது அது சமூக வளர்ச்சியாக உருமாறுகின்றது.

அடுத்து தனிமனிதனது தேவை என்பது மிகப் பெரியது. அதனை நிறைவேற்ற மனிதன் பல்வேறு வளங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஒரு தனிமனித தேவையைப் போன்றே ஒரு நாட்டினதும், பிரதேசத்தினதும் தேவையும் மிகப் பெரியது. எனவே இதனை தனி மனிதன் நிறைவேற்றும் போது நாட்டின் தேவையும் நிறைவேற்றப்படுகின்றது.

மேலும் ஒரு தனியாள் வருமானம் அதிகரிக்கும் போது அது ஒரு நாட்டின் தேசிய வருமானத்திலும் செல்வாக்கு செலுத்தும். தனிமனிதனின் வருமானத்தை ஆதாரமாகக் கொண்டு தான் ஒரு நாடு “பொருளாதார வளர்ச்சியடைந்த நாடு” என்ற பெயர் பெறுகின்றது. உலக பொருளாதாரம் நாடுகளுக்கிடையில் போட்டி மிக்கதாகவும் நாடுகளிடையே பல வகையிலும் இணைப்புற்றதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான இன்றைய காலகட்டத்தில் தொழிலாளர்கள் தொழிற்பயிற்சி மிக்கவர்களாக இருப்பதன் மூலமே ஒரு நாடு பொருளாதாரத்தில் வெற்றி காண முடியும். இதனால் தொழிலாளர்களின் உழைக்கும் சக்தி அதிகரிப்பதோடுஅவர்களது வாழ்க்கைத்தரம்உயர்கிறது.மேலும், வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பாக அமைகின்றது.

ஒரு தனியாள் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கு தேவையான சமூக, சமய, கலாச்சார, பண்பாடுகள், ஒழுக்கக் கோவைகள் மற்றும் சமூக விழுமியங்கள் போன்ற விடயங்களைக் கற்று தானும் ஒரு அங்கத்தவனாக வாழ்வதற்கு முயலும் செயன்முறையே “சமூகமயமாக்கல்” எனப்படும்.

எனவே ஒரு தனிமனிதனை சமூகமயமாக்குவதில் சமூக நிறுவனங்களான பாடசாலை, குடும்பம், ஊடகம், சகபாடிகள், கல்வி நிலையங்கள், ஆலயங்கள் என்பன அளப்பரிய பணியை செய்கின்றன. எனவே ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வு சமூகமயப்படுத்தும் போது தான் ஆரோக்கியமான சமூகம் உருவாகின்றது. தனி மனிதனின் நற்பழக்கங்கள், நடத்தைக் கோலங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தன்மைகள், சமூகத்தோடு இணைந்து வாழும் நடைமுறைகள், சிந்திக்கும் ஆற்றல் என்பவை சமூக அபிவிருத்தியைத் தீர்மானிக்கின்றன. எனவே சிறந்த சமூகத்தை நாட்டில் உருவாக்க வேண்டுமாயின் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு காத்திரமாக அமைய வேண்டியுள்ளது.

ஒரு சமூகம் அரசியல், பொருளாதாரம், கலை கலாச்சாரம், குடிப்பரம்பல், பௌதீகவியல், உற்பத்தி, வர்த்தகம், நுகர்வு, என்பனவற்றில் கால மாற்றத்திற்கு ஏற்ப புதிய திட்டங்களை வகுத்து செயற்படும் போது வளர்சியை தொடுகின்றது. இன்றைய காலத்தில் தொழிநுட்பம் சமூக அபிவிருத்தியில் பெரும் பங்கெடுக்கின்றது. அதாவது நிலாவை பார்த்து உணவுண்ட மனிதன் இன்று நிலாவுக்கே சென்று கண்டுபிடிப்புக்களை

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிலன் எங்கே?

தமிழ் சசி



**"ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் கேட்காத சூழலில் ஒரு சிலர் மட்டுமே தன்னிச்சையாக சமூக வலைத்தளங்களில் கையறு நிலையுடன் கேட்க வேண்டியுள்ளது – முகிலன் எங்கே ?"**

ஈழத்தில் போர் நடைபெற்ற காலங்களிலும், அதற்குப் பின்பும் கூட ஏராளமான தமிழர்கள் வெள்ளை வான்கள் மூலமாகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு இருக்கிறார்கள். சாலையோரங்களில் நடந்து செல்லும் பொழுது, வீட்டில் இருக்கும் பொழுது, கோயிலுக்குச் செல்லும் பொழுது என எந்த நேரம் வேண்டுமானாலும் கடத்தப்படலாம், காணாமல் போகலாம் என்ற சூழ் நிலையே ஈழத்திலும், கொழும்பிலும் நிலவியது. சிறீலங்கா அரசாங்கமே இவ்வாறு கடத்திச் சென்று கொன்று விடுவது அல்லது ஏதேனும் சிறைகளில் சட்டவிரோதமாக அடைத்து வைப்பது போன்றவற்றைச் செய்து வந்துள்ளது.

காஷ்மீரிலும் இந்தியப் படைகள் இது போல பல காஷ்மீரிகளை கடத்திச் சென்றுள்ளன. காணாமல் போன அவர்களின் நிலை குறித்து எதுவும் தெரியாது. இது குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்பு இந்தியா மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. உலகெங்கிலும் போர்ச் சூழல் உள்ள பகுதிகளில் காணாமல் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகம். இதில் அந்தப் பகுதியில் உள்ள அரசாங்கங்களின் பங்கு முக்கியமாக உள்ளது.

இவ்வாறான நிலைமை தமிழகத்திலும் வரும் என எதிர்பார்க்கவில்லை. சூழலியல் போராளி முகிலன் காணாமல் ஆக்கப்பட்டு இருக்கிறார். அவரது நிலை என்ன என்பது தெரியவில்லை.

தமிழகத்தின் அதிமுக அரசு பாஜகவின் சொல்படி இயங்கும் அடிமை அரசாங்கம். பாஜக அரசாங்கம் நாக்பூர் திட்டங்களையும், கார்ப்பரேட் நிறுவனங்களின் திட்டங்களையும் செயல்படுத்தும் அரசாங்கம் தானே தவிர சாமானிய மக்களின் அரசாங்கம் அல்ல. இந்த அரசாங்கங்களின் உதவி இல்லாமல் முகிலன் காணாமல் போய் இருக்க முடியாது என்பது தான் எல்லோரின் எண்ணமாக உள்ளது.

தமிழகத்தில் எத்தனை செய்தி ஊடகங்கள் உள்ளன என்று எண்ன முடியாத அளவுக்கு ஊடகங்கள் வளர்ச்சி பெற்று விட்டன. ஆனால் தமிழகத்தில் இன்று வரை முகிலன் காணாமல் போனது ஒரு பெரிய பிரச்சனையாகத் தெரியவில்லை. தேர்தல் கூட்டணி, போர் எனச் சுவாரசியமான செய்திகளைச் சுற்றித் திரியும் ஊடகங்களுக்கு, ஒரு சூழலியல் போராளி காணாமல் போனது பெரிய பிரச்சனையா என்ன?

கூட்டணிப் பேர அரசியல் செய்து வரும் முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் கூட இதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மணல் கொள்ளைகளும், கனிமவளச் சுரண்டலும் தொடரத்தான் போகின்றன. அதனால் முகிலன் போன்றவர்கள் காணாமல் ஆக்கப்படுவது அடுத்து ஆட்சிக்கு வரும் கட்சிக்கு நல்லது தான். அதனால் அவர்களும் அதனைப் பற்றி அதிகம் பேசுவதில்லை.

தமிழகத்திலும் இலங்கை போல வெள்ளை வான்களின் கலாச்சாரம் வந்து விடுமோ என்ற அச்சமே ஏற்படுகிறது. அதிக போராட்டங்கள் நடைபெறும் தமிழகத்தில், போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வர, சமூகச் செயற்பாட்டாளர்கள், வெள்ளை வான் கலாச்சாரம் மூலமாக வலிந்து காணாமல் ஆக்கப்படும் அபாயகரமான சூழலை தமிழகம் எதிர்கொள்ளுமோ என்ற அச்சத்தையே முகிலனின் நிலை நமக்கு ஏற்படுத்துகிறது.

ஊடகங்களும், அரசியல் கட்சிகளும் கேட்காத சூழலில் ஒரு சிலர் மட்டுமே தன்னிச்சையாக சமூக வலைத்தளங்களில் கையறு நிலையுடன் கேட்க வேண்டியுள்ளது – முகிலன் எங்கே ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைத் தொழில் மேம்பாடு

தியாகராஜா பன்னீர்ச்செல்வம்
(ஓய்வுபெற்ற அதிகாரி, பனை அபிவிருத்திச் சபை)

பனைத்தொழில் மேம்பாடடடைய மேலும் தொழிற் சாலைகள் உருவாகின. பனை அபிவிருத்திச்சபை ஆரம்பிக் கப்பட்டு இயங்கத்தொடங்கிய போது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் நம்பிக்கையுடன் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டன. பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கனகசூரியனின் மறை விற்கு பின் பனை அபிவிருத்திச் சபை இந்துகலாசார அமைச்சின் கீழ் வந்தது. அதன் அமைச்சராக செல்லையா இராசதுரை அவர்கள் இருந்தார். பனை அபிவிருத்திச் சபையின் தலைமைப்பதவிக்கு அப்போது தெ.ப.கூ.சங்கங்களின் சமாசச் செயலாளராக கடமையாற்றிய திரு.க.நடராசா அவர்கள் நியமிக்கப் பட்டார். இவர் சங்கங்களின் செயற்பாடுகளுக்கு ஒரு உந்துசக்தியாகவும் ஊக்கமளிப்பவராகவும் செயற்பட்டார்.

தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம் பித்தபோது அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வந்தன. உதாரணத்திற்கு அச்சுவேலி சங்கம் திரு.சண்முகலிங்கம் அவர்களின் வீட்டில் ஆரம்பத்தில் இயங்கியது குறிப்பிடத்தக்கது. இதுபோல எல்லாச் சங்கங்களும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது. சங்கங்கள் கணிசமான அளவு தமது வருமானத்தை பெருக்கிக் கொண்டன. 1982 ஆம் ஆண்டளவில் தமக்கென சொந்த மாகக் காணி அமைத்து திறம்பட இயங்கி வந்தன.

கள் உற்பத்திகள் அதிகரித்த போது விற்பனவுக்கு மேலதிகமாக இருந்த கள்ளை விரயமாக ஊற்றும் நிலை ஏற்பட்டது. இதை ஈடுசெய்வதற்கு சங்கங் கள் சேர்த்து ஆலோசனை செய்து அப்போதைய பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரு டன் ஆலோசித்து ஒரு பாரிய வடிசாலை அமைப்ப தற்கு முடிவெடுத்தனர். உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.த.இராசலிங்கம் அவர்கள் மற்றும் பருத்தித்துறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் ஆகியோர் தமது தொகுதி களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் கணிசமான தொகை யினை வடிசாலை அமைப்பதற்கு வழங்கினர். ஏனைய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியதன் பலனாக திக்கத்தில் பாரிய வடிசாலை ஒன்று அமைக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபை சகல வழிகளிலும் இத் தொழிற்சாலைக்கு ஒத்துழைப்பை நல்கி வந்தது. 1984 இல் இவ்வடிசாலை தொழிற்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இவ்வடிசாலை யாழ்மாவட்ட வடிசாலைகள் கூட்டுறவுச் சமாசம் என்ற பெயரில் செயற்பட்டது. அதன் தலைவராக உள்ளூராட்சி ஆணையாளர் திரு DV வாமதேவன் அவர்களும் செயலாளர் திட்டமிடல் அதிகாரி திரு.க சிவலிங்கம் அவர்களும் இருந்தனர். அச்சுவேலி தென்னை பனை கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. க. தியாகராசா, கட்டைவேலி தெ.ப.கூ.சங்கதலைவர் திரு.சு.நடேசு, சங்கானை தெ.ப.கூ.ச.தலைவர் திரு.தங்கராசா, பருத்தித்துறை தெ.ப.கூ.ச.தலைவர் திரு.க.சிவப்பிரகாசம், ஊர் காவற்றுறை தெ.ப.கூ.ச.தலைவர் திரு.மத்தியூஸ், பனை அபிவிருத்தி சபை தலைவர் திரு.க நடராசா ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாக இணைந்து செயற்பட்டனர்.

வடிசாலையின் முகாமையாளராக பருத்தித் துறையைச் சேர்ந்த தரு.சு.விஜயராசா அவர்களும் நியமிக் கப்பட்டார். 1984 ஆம் ஆண்டு தை மாதம் திக்கத் தில் அமையப் பெற்ற உலகத்திலே முதல் பெரிய பனஞ் சாராய வடிசாலையாக மிளிரும் திக்கம் வடிசாலை ஆரம்ப நிகழ்வு அப்போது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக இருந்த திரு.தேவநேசன் நேசையா தலைமையில் ஆரம்பிக் கப்பட இருந்தது. அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் ஒரு அசாதாரண சூழலிருந்தது. சொல்லி வைத்ததுபோல் சிறு அசம்பாவிதத்தினால் உத்தியோகபூர்வமான வைபவம் நிகழாவிடினும் அன்றிலிருந்து இவ்வடிசாலை இயங்க ஆரம்பித்தது. இவ்வடிசாலை தொடர் வடிப்பை செய்யும் ஆற்றல் வாய்ந்தது. இதை patient still எனக்கூறுவர். அது ஒரு மணித்தியாலத்திற்கு 300 கலன் கள்ளினை மதுசார மாக வடிக்கும் ஆற்றலுடைய ஒரு நவீன தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு வடிசாலையாக உருவாக்கப்பட்டது. நீராவி மூலம் கள்ளினை வடிகலனில் வடிக்கும் திறன் பெற்றது. சராசரி 90% மதுசாரச் செறிவு பெறக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்இயந்திர தொகுதியினை அதாவது வடிகலன் தொகுதியை அப்போது யாழ்மாவட்டத்தில் இயங்கிய புறோமோட்டர்ஸ் எஞ்சினியரிங் ஸ்தாபனம் (Promotors Engineering pvt LTD) வடிவமைத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வடிசாலை ஆரம்பிக்கும் போது வடிசாலை முகாமையாளராக திரு.விஜயராசா அவர்களை நியமித்தாலும் அவர் தொடர்ந்து வராததினால் அவரின் இடத்தை நிரப்புவதற்கு நிர்வாகத்தினர் பெரும் சிரமப்பட்டனர். பின்னர் நேர்முகப்பரீட்சையில் முன்பு கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் தொழிற்சாலை முகாமையாளராகக் கடமையாற்றி விலகியிருந்த திரு.சு.குகநேசன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு வடிசாலை முகாமையாளராக திக்கம் வடிசாலையைப் பொறுப்பெடுத்தார். கொதிகலன் இயக்குனராக (Boiller operator) திரு.நா.பாலகிருஷ்ணன், வடிகலனாளராக திரு.தி.பன்னீர்ச் செல்வம் மற்றும் தொழிலாளி திரு.க.நாகராசா ஆகியோருடன் இவ்வடிசாலை இயங்கத் தொடங்கியது. வடிகலனாளராக திரு.க.நவரத்தினம் என்பவரும், திரு.கமலநாதன் இருவரும் சேர்த்தியங்கினர். ஆனால் இருவரும் இரண்டு மாதங்களில் வெளிநாடு சென்றதால் தனித்து தி.பன்னீர்செல்வம் வடிகலனாளராகவும் நா.பாலகிருஷ்ணன் கொதிகலன் இயக்குனராகவும் இருந்து திறம்பட செயற்பட்டனர்.

இக்காலப்பகுதியில் பனை அபிவிருத்திச்சபை தமது உற்பத்தி உத்தியோகத்தர் திரு.ஜெகநாதன், உற்பத்தி உதவியாளர் திரு.க.லோகநாதன் ஆகியோரின் சேவையினை வடிசாலைக்கு வழங்கியது. கள்ளின் செறிவினைப் பார்ப்பதற்குரிய எபிலியோ மீற்றர் போன்ற உபகரணங்கள் வழங்கி இத்தொழிற்சாலை வருமானமீட்டும் வரை சகல உதவிகளையும் பனை அபிவிருத்தி சபை வழங்கியது. ஆனால், வடிசாலையில் செறிவு கூடிய மதுசாரம் (Sprit) வடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அதை குடிப்பதற்கேற்ற சாராயமாக மாற்றி விற்பதற்குரிய அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கான அனுமதி நீண்டகால சிரமத்தின் பின் வழங்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு கொழும்பில் மகாவலி இன் என்னும் இடத்தில் பனை அபிவிருத்திச் சபையின் கண்காட்சியில் திக்கம் வடிசாலையின் உற்பத்தியான பனஞ்சாராயம் வைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டது. இதற்கு பனை அபிவிருத்திச் சபையின் அப்போதைய தலைவர் திரு.க.நடராசா அவர்களின் பூரண ஒத்துழைப்பு இன்றியமையாததாக அமைந்தது.

திக்கம் வடிசாலையின் உற்பத்தி "Rondier" என்னும் பெயரில் விற்பனையாகி வந்தது. வடிசாலை முகாமையாளரின் தொழில்த் தேர்ச்சி விடாமுயற்சி என்பவற்றின் மூலம் இச்சாராயம் விற்பனவு செய்யப்பட்டு வந்தது. இது சங்கங்கள் மேலதிக கள்ளை விரயமாக ஊற்றும் நிலையை நிறுத்துவதற்கு உறுதுணையாக அமைந்தது. திக்கம் வடிசாலைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்தும் கள்ளு கொண்டு வரப்பட்டு மதுசாரமாக வடிக்கப்பட்டது. வடிக்கப்பட்ட மதுசாரம் 'கல்மல்' எனப்படும் சிறப்பாக அமைக்கப்பட்ட மர கொள்கலன்களில் சேமிக்கப்பட்டு பின் சாராயமாக்கப்பட்டு விற்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட சில அசாதாரண சூழ்நிலைகளால் தென்னிலங்கை சாராயங்கள் இங்கு வருவது மிகமிகக் குறைவு. இது திக்கம் வடிசாலை உற்பத்தியான றொன்டியர் (Rondier) விற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியது. அப்போது விற்பனவு முகவராக தாசன் மதுபான விற்பனை நிலைய (Thasan liquor shop) உரிமையாளர் மனமுவந்து உற்பத்திகளை விற்பனவு செய்து வடிசாலையின் வளர்ச்சிக்கு உதவினார்.

அக்காலப்பகுதிகளில் சங்கங்கள் பனங்கள்ளு உற்பத்தியை கட்டுப்பாடுகளின்றி உற்பத்தி செய்து திக்கம் வடிசாலைக்கு வழங்கிகளாக அமைந்தனர். முல்லைத் தீவு, கிளிநொச்சி தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கங்கள் மேலதிக கள்ளினை செறிவு குறைந்த மதுசாரமாக வடிப்புச் செய்தும் வழங்கினர். இதனால் அவர்கள் வருமானத்தை அதிகளவாகப் பெறக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் வடிசாலை, பனையின் பருவகாலங்களில் இரவு பகலாக தொழிற்பட்டது குறிப்பிடத்தக்கது.

திக்கம் வடிசாலை இயங்கிய காலப்பகுதியில் சங்கங்கள் தமது உற்பத்திகளை திறம்பட மேற்கொண்டனர். கள்ளு உற்பத்தியுடன் பதநீர், பனங்கட்டி, பனங்கற்கண்டு, பனஞ்சீனி போன்ற உற்பத்திகளையும் இச்சங்கங்கள் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பனஞ்சாராய வடிசாலை இயங்கியதன் மூலம் வடமாகாணத்திலிருந்த தெ.ப.கூ.சங்கங்கள் சார்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. அத்தோடு வடிசாலை அப்பகுதியில் வாழ்ந்த இளைஞர்கள் கணிசமான அளவினருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

திக்கம் வடிசாலையினைத் தொடர்ந்து வலிகாமம் கொத்தணி நவாலிப்பகுதியில் ஒரு பானை வடிசாலை (pot still) அமைக்கப்பட்டது.. வலிகாமம் கொத்தணியில் கோண்டாவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, சுன்னாகம், தெல்லிப்பளை, காரைநகர், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் (ப.தெ.வ.அ.கூ. சங்கங்கள்) அங்கத்துவச் சங்கங்களாக இருந்தன. பனைப் பருவகாலங்களில் அச்சங்கங்களின் கள்ளினை இவ்வடிசாலையில் வடித்தனர். இவ்வடிசாலை 8 மணித்தியாலத்தில் 3000 போத்தல் கள்ளினை மதுசாரமாக வடிக்கும் திறனை உடையதாக இருந்தது. சராசரியாக 70% மதுசாரச் செறிவு பெறக்கூடியதாக இருந்தது. தென்மராட்சிக் கொத்தணியில் சாவகச்சேரி, கொடிகாமம், பளை ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. பனையின் பருவகாலங்களில் மேற்படி சங்கங்களிலிருந்தும் திக்கம் வடிசாலைக்கு கள்ளினை அனுப்பி வருமானத்தை ஈட்டிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு திக்கம் வடிசாலை ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் மிகையாகாது. இக்காலப்பகுதியில் நாட்டின் அசாதாரண சூழலிலும் மிகவும் இக்கட்டான சூழலிலும் பனைத் தொழிலை நம்பி வாழ்ந்த அத்தொழிலாளர் தமது தொழிலை கஷ்டத்தின் மத்தியில் மேற்கொண்டு நம்பிக்கையுடன் செயற்பட்டனர். ஆயினும் பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழி பொய்யாகவில்லை. 1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் ஏற்பட்ட அனர்த்தத்தில் வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்து சென்ற வேளை திக்கம் வடிசாலையும் பெருமளவு இழப்பீட்டினை சந்திக்க நேர்ந்தது. வடிசாலையின் மின்னியந்திரங்கள் மற்றும் குழாய்ப் பொருத்துகைகள் என்பன அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன. மதுசாரம், மற்றும் போத்தலிலடைத்து விற்பனவு செய்வதற்குத் தயாராக இருந்த சாராயம் என்பனவும் இல்லாமலாக்கப் பட்டன. பாரிய இழப்பினை திக்கம் வடிசாலை சந்திக்க நேர்ந்தது. மீண்டு வர முடியாத அளவிற்குச் சேதம் ஏற்படுத் தப்பட்டிருந்தது.

இக்காலகட்டம் மிகவும் சோதனைமிகுந்ததாக இருந்தது. அங்கு கடமையாற்றிய தொழிலாளர்கள் சம்பளம் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. தமது கள்ளினை வழங்கிய வர்களுக்கு அதற்கான பெறுமதியை கொடுக்க முடியாத நிலை திக்கம் வடிசாலைக்கு ஏற்பட்டது. 1987 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் நடந்த சம்பவத்தின் பின் எந்தவித செயற்பாட்டினையும் திக்கம் வடிசாலையில் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இச்சம்பவம் நடந்து இரண்டு மாதங்களின் பின் தான் வடிசாலை வளவினுள் தொழிலாளர்களோ வடிசாலை நிர்வாகத்தினரோ செல்ல முடிந்தது. அங்கு சென்ற வேளை மிகவும் துயர்மிகுந்த சொல்லில் வடிக்க முடியாத துயரத்தினை அங்கு வேலை செய்த தொழிலாளர்களும் வடிசாலை நிர்வாகத்தினரும் சங்கத் தொழிலாளர்களும் சந்திக்க நேர்ந்தது.

இருந்தும் மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. புனர்வாழ்வு அமைச்சிற்கும் இழப்பீடுகளைத் தெரியப்படுத்தி உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இம்முயற்சிக்கு பனை அபிவிருத்திச் சபை தலைவராக இருந்த திரு.க.நடராசா அவர்களின் பங்களிப்புக்கள் கூடுதலாக அமைந்திருந் தது. இழப்பீடு பெற்று இவ்வடிசாலையை இயக்குவதற் கான முயற்சி வெற்றியளித்தாலும் வடிசாலை நிர்வாகம் ஒரு கூட்டுறவு அமைப்பாதலால் உதவித் தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. பனை அபிவிருத்திச் சபை வடிசாலையினை பொறுப்பெடுப்பதாயின் உதவித் தொகை வழங்க முடியும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டதினால் அப்போதைய நிலையில் திக்கம் வடிசாலையினை பனை அபிவிருத்திச்சபை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து அரசிடமிருந்து நிதியுதவியைப் பெற்று மேற்படி வடிசாலையினைப் புனரமைப்புச் செய்யும் பொறுப்பை பனை அபிவிருத்திச் சபை பெற்றுத் துரிதமாக செயற்பாட்டிலியங்கியது. இதன் பலனாக 1988 ஆம் ஆண்டு ஆனிமாதம் முன்பு வேலை செய்த வடிசாலை முகாமை யாளர், கொதிகலன் இயக்குனர், வடிகலன் இயக்குனர் மற்றும் தொழிலாளிகளைப் பணிக்கமர்த்தி வடிசாலை இயக்கத் தொடங்கியது. அவ்வேளை ஐயாயிரம் லீற்றர் (5000 லீற்றர்) மட்டும் மதுசாரம் சேமிக்கும் தொட்டியில் இருந்தது. அதுமட்டும் தான் வடிசாலைக்கு முதலீடாக அப்போதிருந்தது. அதை சாராயமாக மாற்றி விற்றதன் பயனாக சங்கங்களிற்கு வழங்கவிருந்த கடன் நிலுவை களை மீள வழங்க முடிந்தது. 1990 ஆம் ஆண்டளவில் திக்கம் வடிசாலை மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தது. முழு வீச்சுடன் செயற்பட்டது. இரவுபகல் என்று பாராது தமது உற்பத்தி நடவடிக்கைகளில் முழுவீச்சுடன் வடிசாலை செயற்படத் தொடங்கியது. திக்கம் வடிசாலைச் சாராயத்தின் உயர்ந்த தரம் காரணமாக அதை வாங்குவதற்கு விருப்புடன் பலர் முன் வந்தனர். இக்காலப்பகுதியில் விற்பனவு முகவர் தாசன் மதுபான விற்பனை நிலைய உரிமையாளர் முனைப்புடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொழி லாளர்களின் வாழ்வாதாரத்தில் மேம்பாட்டைக் காணக் கூடியதாக இருந்தது. நாட்டின் அசாதாரண காலத்திலும் கூட இவர்களின் வாழ்வாதாரம் தளம்பலின்றிக் காணப்பட்டது.

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

மேற்கொள்ளும் அளவிற்கு தொழில்நுட்பத்தை பயன் படுத்தி உள்ளான். மற்றும் மருத்துவ துறையில் நோய்ச் சிகிச்சை, சந்திரசிகிச்சை, என்பவற்றில் புதிய தொழில் நுட்பங்களின் பயன்பாடு நாட்டின் அபிவிருத் திக்கு பெரும் பங்காற்றுகின்றது.

அடுத்து ஒரு தனிமனிதன் தனிப்பட்ட முயற்சியால் பொருளாதார, அரசியல், கல்வியியல், சட்டத்துறையில் அடையப்படும் வெற்றி, அறிவு பெருமை என்பன ஏதோ ஒரு வகையில் ஒரு சமூகத்தின் விருத்தியை வெளிப்படுத்து கின்றன. அந்த வகையில் சில எடுத்துக்காட்டுக்களை நோக்குவோம். பாகிஸ்தானைச் சேர்ந்த மாலாலா என்ற முஸ்லிம் மாணவி பெண்கல்விக்காகப் போராடி பல வெற்றிகளை அடைந்துள்ளார். டாக்டர் அப்துல் கலாம்,இந்தியாவின்ஜனாதிபதியாகவும்,உலகின்விஞ்ஞானி யாகவும், மற்றவர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாளரா கவும் திகழ்ந்தார். இவர்கள் ஒவ்வொரு தனிநபர் முயற்சியும் சமூகத்தில் வளர்ச்சியாக மாறும் என்பதற்கு உதாரணமாக இருக்கிறார்கள்.

எனவே தனிமனிதனது செயற்பாடு ஒரு சமூகத்திலும் ஒரு சமூகத்தின் செயற்பாடு ஒரு தனிமனிதனிலும் எந்தளவு செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை எம்மால் ஊகித்து பார்க்க முடிகின்றது. எனவே ஒரு தனிமனிதனால் எய்தப்படு கின்ற வெற்றிகள் மற்றும் மாற்றங்கள், அபிவிருத்தி செயற் பாடுகள் அனைத்தும் நிச்சயம் சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்வுகள் - 22

# திருவிழாக்கள்

நெம்பு

## அப்புக்காத்தரும்... அன்னமாக்காவும்...

ஒருமாதிரி திருவிழா முடிஞ்சுது என்ன...

ஓமோம் இந்தத் திருவிழா எண்டா சும்மாவே...

எத்தனை ஆயத்தங்கள்... எத்தனை பயணங்கள்...

ஒருக்கா திருவிழாக்குப் போட்டு வந்திட்ட மெண்டால் காணும்...

ஒருக்கா மக்காவுக்குப் பயணம் போனால் ஊருக்குள்ள .... தானே

திருவிழாவில என்ன செய்தாலும் என்னத்தைக் கதைச்சாலும் ஒரே புகழ்தானே பாருங்கோ..

உபயகாரர் ஆர்.. உபயம் என்ன எண்டு தெரியுமே..?

எல்லாம் சொல்லிப்பண்ணித்தானே நடக்குது..

இந்தமுறை எவ்வளவு சனம் எண்டு பாத்தனீங்களே..?

சனங்கள், கட்சிகள், அமைப்புக்கள் எண்டு எல்லாரும் எல்லோ போனவை.

ஊர் கூடித்தானே தேர் இழுக்கவேணும்...

இப்ப உலகமே கூடி எல்லோ இழுக்கினம்...

ஓமோம்... அதெண்டாச் சரிதான்..

சாமியைத் தேரில ஏற்றியாச்சு.. இனியென்ன வருசம் வருசம் தேர் இழுத்துச் சுத்தவேண்டியது தான்.

ஆயிரம் பொய் சொல்லியெண்டாலும் ஒரு கல்யாணத்தை நடத்திப் போடவேணும் என்று சொல்லுவினம்

எத்தனை பொய்க்கதைகளை, ஆராரிட்ட வேணுமெண்டாலும் மாத்தி மாத்திச் சொல்லிக் காரியத்தைப் பாத்தாச் சரி...

எந்தக் காரியத்தைப் பற்றிச் சொல்லுறியள்?

அவரவர் காரியத்தைப் பாத்தாச் சரிதான்

எங்கட சனங்கள் வெறும் மொக்குகள், ஒண்டும் விளங்காதாம் - அப்படித்தான் அவையள் சொல்லிக்கொள்ளினம்...

எங்கள வைச்சுத்தான் வியாபாரமே நடக்கு தெண்டு தெரிஞ்சும் சும்மா பேய்க்கணபதிகள் மாதிரி பேசாம இருக்கிறம் பாருங்கோ

அதான் அப்படிக் கதைக்கினம் என்ன?

## பொய்களாலான உலகம்

ஒரே நாளில் எத்தனை பொய்கள்...
ஒரே மனிதரிடம் எத்தனை பொய்கள்...
ஒவ்வொரு முகத்திடமும் எத்தனை பொய்கள்...
வாய் கூசாப் பொய்களின் வகையறாக்கள்
எத்தனை.

தன் பெயர் சொல்வதற்காய் பொய்...
தன்னை முன்நிறுத்தப் பொய்...
மற்றவனை ஏமாற்றப் பொய்...
தானே விரிந்த அகங்கார மனையில்
அலங்கார வளைவுகளாய்ப் பொய்கள்...

மண்ணிற்கும், பொன்னிற்குமாய் பொய்...
கடன் வேண்டக் கூறும் காரணங்கள் பொய்...
ஏன் என்று கேட்டால் பொய்...
ஏதற்காகவென்றாலும் பொய்...
மெய்யாகவே தாம் உண்மைக்காய்
உழைப்பதாய் கூறுவதும் பொய்..

பல பொய்களால் ஆனதே இந்த உலகம்
இதுவே மெய் என்று காண் இன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கேட்டு திரண்டது தமிழினம்

எஸ்.ரவி-

இலங்கைக்கு கால அவகாசம் வழங்க வேண்டாம், தமிழின அழிப்பிற்கு சர்வதேச விசாரணை வேண்டும், இலங்கையைப் பொதுச் சபைக்குப் பாரப்படுத்த வேண்டும் ஆகிய மூன்று முக்கிய கோரிக் கைகளை முன்வைத்து மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த 16.03.2019 சனிக்கிழமை பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமாகி யாழ்.மாநகர சபை மைதானம் வரை இடம்பெற்றது.

குறித்த பேரணியில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவ,மாணவிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய மும்மதங்களையும் சேர்ந்த மதகுருமார்கள், வடக்கு, கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியற் கைதிகளின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எவ் உள்ளிட்ட கட்சிகளின் அரசியல்வாதிகள், பல்வேறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிறுவர்கள், பெண்கள், மூத்தோர்கள், இளைஞர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் அணிதிரண்டு கலந்து கொண்டனர்.

இந்த எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்பிற் கெதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பினர். குறிப்பாக இன அழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டுமெனவும், இலங்கைக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாதெனவும் வலியுறுத்திக் கூறினர். ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்திருந்த "மறப்போம், மன்னிப்போம்" கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் "மறக்கவும் மாட்டோம்...மன்னிக்கவும் மாட்டோம்..." எனக் குறித்த எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெளிவாக எடுத்தியம்பினர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தும் சுலோகங்கை-ளயும் தமது கைகளில் தாங்கியிருந்தனர். குறிப்பாக "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும்", "அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்படல் வேண்டும்", "நில அபகரிப்பைத் தடுத்து நிறுத்து", "சர்வதேசமே போர்க் குற்றவாளிகளைப் பாதுகாக்காதே!" உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களை யும் தமது கைகளில் தாங்கி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இறுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் ஒரு பிரகடன அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில், அரசியல், பொருளாதார ரீதியில் அடக்குமுறைக்குள்ளிருக்கும் தமிழ்மக்களிற்கு விமோசனம் கிடைக்கவேண்டும். ஆகவே, இன அடக்குமுறைக்கும், இனப் படுகொலைக்கும் எதிரானசர்வதேச நீதி விசாரணை மேற் கொள்ளப்படவேண்டும். அதனூடாக இனப்பிச்சினைக்கான தீர்வினை நோக்கி இலங்கையினை சர்வதேச சமூகம் நகர்த்த வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

எனவே, தமிழ்மக்கள் ஐக்கியநாடுகள் மனித உரிமைபேரவையின் 30/1 தீர்மானத்தினையே ஏற்றுக் கொள்ளாத நிலையில் தொடர்ந்தும் காலஅவகாசம் வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆட்சி யிலுள்ள அரசாங்கம் திட்டமிட்டுத் தமிழ்மக்கள் மீதான அடக்கு முறைகளினைப் பிரயோகித்து வரு கின்றது. மறைமுகமாக இனப்படுகொலையினைப் புரிந்துவருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேசமட்டத்தில் ஐ.நா சபை செயல்பட வேண்டும்.

இலங்கை விவகாரத்தினை ஐ.நா பொதுச்சபைக்கு அல்லது பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்து வதன் மூலம் சர்வதேச நீதிமன்றத்தினால் அல்லது விசேடகுற்றவியல் நீதிமன்றத்தினால் இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் விசாரிக்கப்பட்டுப் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் தன்னெழுச்சியான முறையில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கும், சர்வதேச சமூகத்திற்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் தெளிவானதொரு செய்தியைச் சொல்லுகிறது.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 25.03.2019 அன்று குரு பிறிண்டேர்சில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org